Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 30 திங்கட்கிழமை (15.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 320

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

மோட்டார் சைக்கிள் 34 இலட்சம்



(11)

கச்சதீவு முற்றுகையை தடுக்கத் தயார்...



(08)

சுதந்திரதேவி ஒரு வருடத்திற்கு லீவு




(13)

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

மாபெரும் பொது அறிவுப் போட்டி

(14)

# உள்ளூர் அபிவிருத்தி தீவகத்தில் ஆரம்பம்



தீவக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் முகமாகவும், அப்பகுதியின் உட்கட்டுமானங்களை விருத்தி செய்யும் முகமாகவும் புதிய செயற் திட்டங்கள் பல நடை முறைப்படுத்தப்படவுள்ளன.

யுத்தத்தினால் அழிவடைந்த தீவகத்தை மீளவும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் கடந்த உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து தற்போது மீண்டும் புது உற்சாகத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக ஜனாதிபதியின் விசேட உத்தரவுக்கமைய விசேட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், தீவக மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்படவுள் ளன. இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக நெடுந்தீவில் நேற்று பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான நடமாடும் சேவையும், பல்வேறு செயற்திட் டங்களின் ஆரம்ப நிகழ்வும் (15ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய சுதந்திர தினம் யாழில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 64ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் முதன் முறையாக யாழ்.நகரிலும் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.பலாலி வீதியில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் மேற்படி இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக இந்திய தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு இந்திய சம்பிரதாய முறைப்படி இடம் பெறவுள்ளது.

அதேவேளை, டெல்லி செங்கோட்டை சிறப்புப் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரதமர் மன்மோகன் சிங் இன்று இந்திய தேசியக் கொடியேற்றி உரையாற்றுகிறார்.

தமிழகத்தில் முதல்வர் ஜெய லலிதா சென்னை தலைமைச் செயலக கோட்டையில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறார்.

## தெற்கு நோக்கி வெடி குண்டு கடத்தல்

### வவுனியாவில் இருவர் சிக்கினர்

(வவுனியா)

வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வெடிபொருட்களைக் கடத்திச் சென்ற பாரவூர்தி ஒன்று வவுனியாவில் படையினரின் சோதனைச் சாவடியில் சிக்கிக் கொண்டது.

கிளிநொச்சியிலிருந்து பழைய இரும்புகளை தென்பகுதிக்கு கொண்டு சென்ற லொறி ஒன்றை நேற்றுக் காலை ஓமந்தையில் படையினர் சோதனை யிட்ட போது வெடி பொருள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அந்த லொறியின் சாரதியும், நடத்துநரும் கைது செய்யப்பட்ட னர்.

குறித்த லொறியின் சாரதியும், அவரது உதவியாள ரும் நேற்றுப் பகல் வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டபோது அவர்களை இந்த மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பழைய இரும்புகளுக்குள் சக்திவாய்ந்த வெடிபொருள் இருந்ததாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர். (39)

## புலிகளின் வலையமைப்பு சர்வதேச விசாரணை ஆரம்பம்

(ஜெனீவா)

புலிகளின் சர்வதேச நிதி சேகரிக்கும் வலையமைப்புத் தொடர்பான சர்வதேச மட்டத்திலான விசாரணைகள் மீண்டும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு மற்றும் சட்டபூர்வமான செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படும் நிதி திரட்டல் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ராஜதந்திர ரீதியிலான ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய நாடுகளிலும் விசாரணைகளை நடத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னணி நிதி திரட்டுவோர் சிலரை சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் கைது செய்துள்ளன.

புலிகளின் நிதிச் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தி வரும் நெதர்லாந்து அதிகாரிகள் ஏற்கனவே மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. எனினும், அது தொடர்பான விபரங்கள் இதுவரை வெளிவரவில்லை.

## தொழில் விருப்பை அறிய புதிய செயற்திட்டம் அமுல்

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் போது மாணவர்களின் தொழில் விருப்பு மற்றும் அவர்களின் தொழில்நிலை பற்றி ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இவ்வருடம் முதல் செயற்படுத்தப்படும். உயர் கல்வி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் இந்தப் புதிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவிக்கிறார். (15ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிஸ் நிலையம்

வடமராட்சி மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் பிரதேசத்தின் பாதுகாப்பிற்காகவும் மருதங்கேணி வடக்குத் தாளையடியில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

மீள் குடியமர்த்தப்பட்ட இப்பகுதி மக்கள் பொலிஸ் சேவையைப் பெறுவதில் பெரும் இடர்களை எதிர் கொண்டு வந்தனர். பிரதேச மக்களின் வேண்டுகோளை ஏற்றுக்கெண்ட பொலிஸார் புதிய பொலிஸ் நிலையமொன்றை இப் பகுதியில் அமைத்து மக்களுக்கு சேவை செய்து வருகின்றனர்.

## வன்னியில் கடும் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் நேற்று திடீரென ஆரம்பமாகிய கடும் மழை மணிக்கணக்கில் தொடர்ந்தது.

நீண்ட நாள் இடைவெளிக்குப்பின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் பரவலாகக் கடுமையான ஆலங்கட்டி மழைப் பொழிவு பல மணி நேரமாக தொடர்ந்தது.

சில பகுதிகளில் வீதிப்போக் குவரத்துக்கள் தடைப்பட்டன. வீட்டின் கூரைகள் (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் முளைவிடும் பணமோசடி திட்டங்கள்

### விழிப்புடன் இருக்க மத்திய வங்கி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக சட்டவிரோத நிதி மோசடித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு ஆசை வார்த்தைகளைக் காட்டி இந்த மோசடித் திட்டங்களில் மக்களின் நிதி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வருகிறது.

எனவே, இவ்விடயத்தில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று மத்திய வங்கியின் வட.பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் துஷ்பிரயோகம் தடுத்து நிறுத்த ஏற்பாடு

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் சிறுவர் பணியகம் ஒன்றை ஸ்தாபிப்பது தெடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

இந்த பணியகத்தை ஆரம்பிப்பது குறித்து ஏற்கனவே பொலிஸ மா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க கூறியுள்ளார்.

சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுக்கும் வகையில் பொலிஸ் சிறுவர் பணியகம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நெடுந்தீவு மக்கள் அரிய சந்தர்ப்பத்தை உரிய நேரத்தில் பயன்படுத்தியுள்ளனர்

## மக்களை நாடி அரசு வருகிறது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



(நெடுந்தீவு)

சரியான நேரத்தில் சரியாக சந்தர்ப்பத்தினை பயன்படுத்திய தினால் இன்று அரசாங்கம் உங்கள் காலடிக்கு வந்துள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நெடுந்தீவில் உள்ள 5 குளங்களில் ஒன்றான வெட்டுக்கிளி குளத்தை ஆழமாக்கும் நிகழ்வில், கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில், வடமாகாணத்தில் குறிப்பாக நெடுந்தீவு போன்ற பிரதேச வளர்ச்சிக்கு கூடிய பங்களிப்பினை வழங்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார். ஏனெனில் அம்மக்கள் தங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள்.

இதுதவிர கடந்த முறை போல் அல்லாது இந்தமுறை தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்கள். எனவே அரசாங்கம் அம்மக்களுக்கு தன்னாலான உதவியைச் செய்யத் தயாராக உள்ளது. கடந்த காலங்களில் விட்ட தவறுகளை விட்டுவிட்டு மக்கள் தெளிவடைந்துள்ளதையிட்டு நான் சந்தோசமடைகின்றேன். இதனடிப்படையில் உங்களது பாவனைக்காக வெட்டுக்கிளி குளம் இன்று ஆழமாகத் தோண்டப்பட்டு புனரமைக்கப்படு கிறது. கௌரவ ஆளுநர் அவர்கள் பல இலட்சம் ரூபாய்களை இத்திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளார்.

ஏற்கனவே இத்திட்டம் தொடர்பாக எனது மனதை உறுத்திக் கொண்டிருந்த ஒரு விடயத்தை இவ்விடத்தில் கூற விரும்புகிறேன். இப்பிரதேசத்தில் பல வருடங்களாக குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அடிக்கடி ஜனாதிபதியிடம் கூறி வந்தேன்.

அந்தவகையில், ஜனாதிபதி அவர்களின் ஆலோசனையில் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரை நேரடியாக இங்கு கூட்டி வந்து காட்டினேன். அந்த நேரத்தில் அவர் உடனடியாக இத்திட்டத்தை அமுல்படுத்த நிதி உதவி செய்வதாக உறுதியளித்தார். இதன் பிரகாரம் தான் இதற்கான ஆரம்ப வேலைகள் இன்று நடைபெறுகின்றன.

இன்று கூட திணைக்களத் தலைவர்கள், மாகாண சபை செயலாளர்கள், தகவல் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் வந்திருக்கின்றார்கள். பல பிரச்சினைகள் இப்பிரதேசத்தில் இருக்கின்றன. இவற்றுக்கு படிப்படியாகத்தான் தீர்வு காண முடியும். எனவே நீங்கள் பொறுமையுடன் இருந்து எங்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், வடபிராந்திய கடற்படை தளபதி ரியர் அட்மிரல் ரவிந்திர சி.விஜயகுணவர்த்தன, உதவி அரச அதிபர் ஏ.சிறி உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் அதிகளவான பொதுமக்கள் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மயிரிழையில் உயிர்தப்பினார்

அராலிப் பகுதியில் 4 வயதுக் குழந்தை விளையாடிக் கொண்டு இருக்கும்போது கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அராலிப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி விமல் (வயது-4) என்ற குழந்தையே விளையாடிக் கொண்டு இருக்கும்போது கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் பெற்றோர்களின் கவனக்குறைவாலேயே நடைபெறுகின்றன என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எஸ்)

## புதிய நிர்வாகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் நந்தீஸ்வரம் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவு நேற்று நடைபெற்றது.

இதில் பசுபதி ஞானவடிவேல் தலைவராகவும், சுப்பிரமணியம் சிவதாஸ் செயலாளராகவும், செல்வரட்ணராஜா சதீஸ்குமார் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களாக வே.ராகரூபன் மற்றும் செ.ரஞ்சித்குமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (17)

## வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த பெருவிழா இன்று காலை 5.30 இற்கு முதல் திருப்பலியும், திருவிழா திருப்பலி காலை 6.45 மணிக்கும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் கூட்டுத் திருப்பலி பூசையும் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனியும், பேரன்னையின் ஆசீர்வாதமும் இடம்பெறும் என ஆலய பங்குத் தந்தை தெரிவித்தார். (எஸ்,52)

## நாவாந்துறையில் விபத்து இளைஞர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும், ஆட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சஞ்சீவ் (வயது-34) என்பவரே முகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## கிணற்றில் வீழ்ந்த வயோதிபர் காயம்

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் வயோதிபர் ஒருவர் கிணற்றுக்குள் வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த க.புலேந்திரன் (வயது 60) என்பவரே படுகாயங்களுக்குட்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)






**யாழ். பேராலய தூய மரியன்னையின் வருடாந்த பெருவிழாவின் முதல் நாள் நிகழ்வான நற்கருணைப் பெருவிழாவின் பவனி மற்றும் ஆசீர் வழங்கல் நிகழ்வினைக் காணலாம். (52)**


## சிறு விளம்பரம்

### வீடு தேவை

மாநகரசபை எல்லைக்குள் உடனடியாக வீடு ஒன்று தேவைப்படுகின்றது. வீடு வாடகைக்கு விட விரும்புபவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ப.விஜயகுமார், 217/3, கடையிச்சாமி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம். (C/071)


## ரமழான் சிந்தனை



**சொர்க்கத்தின் தலைவாசல்களில் சிறந்த தலைவாசல் தந்தையாவார். பெற்றோர்கள் ஒருவருக்கு சொர்க்கமாக அல்லது நரகமாக இருக்கிறார்கள். தந்தையை அன்புடன் பார்ப்பவருக்கு ஹஜ்ஜின் நன்மை கிடைக்கின்றன... -ஹதீஸ்**

**ஐவேளை தொழுகைக்கான நேர அட்டவணை**

**(15.08.2011 முதல் 19.08.2011 வரை)**

**ஸகர் முடிவு - 4.31, சுபஹ் - 4.46, சூரிய உதயம் - 6.04, லுஹறா - 12.16,**

**அஸர் - 3.31, மஃறிப் - 6.26, இஷா - 7.38 (105)**

## இப்தார் நிகழ்வுகள்



**நோன்பு தினத்தை முன்னிட்டு நாடுபூராகவும் உள்ள பள்ளிவாசல்களில் இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இப்தார் என்பது அதிகாலை முதல் நாள் முழுவதும் நோன்பு இருந்த பின்னர் மாலையில் சூரியன் மறையும் வேளையில் மேற்கொண்டிருந்த நோன்பினை திறப்பதாகும். யாழ் சோனகத் தெருவில் அமைந்துள்ள பெரிய முகையதீன் ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வின் போது... ரமழான் நோன்பு முஸ்லிம்களால் 30 நாட்கள் கடைப்பிடிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (105)**




### தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெற்றுவருகிறது.

இதில் 12 ஆம் திருவிழாவான இன்று செல்வி சின்மொய் ஆருத்ரா சேவியரின் பாட்டுக் கச்சேரியில் வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - வி.ரமணா ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

### ஆன்மீகச் சொற்பொழிவுகள்

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு 63 நாயன்மார் மண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவில் 12 ஆம் திருவிழாவான இன்று 'தெய்வ பிரீதி, பாவபீதி, கங்கநீதி' என்னும் விடயம் பற்றி கே.நாகதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை ஆன்மீக சிந்தையுடன் நடத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் 12 ஆம் திருவிழாவான இன்று 'நெஞ்சக்கனல்' எனும் விடயம் பற்றி ந.நவராஜ் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் அரியாலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, பெரியவிளான் வடகேசரிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலை ஆகிய பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன.

நல்வழியில் செல்பவனுக்கு முதலில் கெட்டதாகத் தோன்றினாலும் பின்னுக்கு நல்லதே நடக்கும். என்றைக்கும் நன்மையே வெற்றி அடையும் நீதி என்றும் மாறாது. ஆகையால் நியாயத்திற்கும தர்மத்திற்கும் குறைவு கிடையாது.

-ஜயேந்திரர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மக்களிடம் வெடிக்கும் கோபம் ஏன்?

இங்கிலாந்தில் பொலிஸாரால், குற்றவாளி என்று கருதப்பட்ட ஒருவரைக் கொன்றுவிட நேர்ந்ததற்கு இவ்வளவு பெரிய கலவரங்கள், கொள்ளையடிப்புகள், தீவைப்புகள் நடந்தது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமில்லாமல் சமீபத்திய மத்திய கிழக்கு நாடுகளில் வெடித்த கலவரங்கள் மற்றும் தெற்கு சீனாவில் மத அடிப்படையில் வெடித்த கலவரம் ஆகியவற்றுக்கான பொதுக்காரணங்கள் ஏதேனும் உண்டா என்று இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

டுவிற்றர், ஃபேஸ்புக் உள்ளிட்ட தகவல் தொடர்பு வளர்ச்சியின் விளைவுகள் என ஒருபுறம் பேசப்பட்டாலும், உலக பொருளாதார சரிவை ஒட்டியும் இந்தக் குழப்பங்களின் காரணம் அலசப்படுகிறது.

தற்போது இங்கிலாந்தில் ஏற்பட்ட கலவரத்திற்கு அடிப்படைக் காரணம், "அடுத்த தலைமுறைக்கு பணம் ஏதும் விட்டு வைக்காத சூழ்நிலை ஏற்பட்டதே" என்று கூறப்படுகிறது. அதுவும், அங்கே குடியேறி இங்கிலாந்துக் குடிமக்களாக வாழ்ந்து, அந்த நாட்டிற்கு வளம் சேர்க்கும் ஒரு பகுதி மக்களுக்கு, எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகத் தெரிகிறது.

அந்தக் கலவரத்தில், முக்கிய நகரங்களில் வங்கிகளின் முகப்புகள், பெரிய கடைகளின் முன்வாசல்கள் ஆகியவற்றை, இளைஞர்கள் அடித்து நொறுக்கி, தீவைத்து ஆவேசப்பட்ட சம்பவங்கள் அதிகம் தெரியவந்துள்ளன. பணம் வைத்திருப்பவர்கள், பணமில்லாதவர்கள் என்று இரு பிரிவினர் உருவாகும் வகையில் நிர்வாகம் இருந்ததே, தற்போதைய பிரச்சினை என்று, இங்கிலாந்தில் ஆய்வாளர்கள் பலரும் கருத்து தெரிவித்திருக்கின்றனர்.

அமெரிக்கா தற்போது சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடி குறித்தும், அதன் அபாயங்கள் குறித்தும் தொடர்ந்து செய்திகள் குவிகின்றன. அமெரிக்காவின் பொருளாதார கடன்தர வரிசையை (credit rating), கடந்த வாரம் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் நிறுவனம் குறைத்து அறிவித்தது. அமெரிக்காவுடைய வரவுசெலவுக் கணக்கில் துண்டு விழும் தொகை அதிகமாக இருப்பதைக் காரணம் காட்டி மதிப்புக் குறியீட்டை அது குறைத்துள்ளது. "உலக சந்தையின் கையிருப்பு நாணயம் என்ற அந்த அந்தஸ்திலிருந்து அமெரிக்க டொலரை எடுத்துவிட்டு வேறொரு புதிய நாணயத்துக்கு அந்த அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்" என்றும் அது கூறியுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார நிலைமையை இந்த தர வரிசை இறக்கம் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டதையடுத்து, உலக நாடுகள் முழுவதற்குமே பயம் பரவிவிட்டது. இரு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது ஏற்பட்ட கஷ்டங்களை உலகம் இன்னும் மறக்கவில்லை. பல நாடுகளும் நிறுவனங்களும் இன்னும் அந்த வீழ்ச்சியின் தாக்கத்திலிருந்தே மீளவில்லை. இந் நிலையில் மீண்டும் ஒரு பொருளாதாரத் தேக்கமோ அல்லது பொருளாதார சறுக்கலோ ஏற்பட்டால என்ன செய்வது என்ற பயம் உலகம் முழுவதுமே பரவியுள்ளது.

இதன் எதிரொலியாக சர்வதேச பங்குச் சந்தைகளில் நிலையற்ற தன்மை தேர்ன்றியுள்ளது. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொருளாதார நிலையிலும் சரிவு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று உலக வங்கி தலைவர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா ஏற்கனவே பெரும் கடன் சுமையால் திணறிக் கொண்டிருக்கிறது. அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் 9.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதாவது ஆறு அமெரிக்கர்களில் ஒருவருக்கு வேலை இல்லாத நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, பணக்காரர்கள் பட்டியல் அதிகரிப்பது, மொத்த வளர்ச்சி அதிகரிப்பு, சிறந்த ஜனநாயகம், அதிக ராணுவ பலம் போன்ற அம்சங்கள் ஆகியவை மட்டும் ஒரு நாட்டில் மக்களை அமைதியாக வாழ வைக்காது என்ற கருத்து ஏற்படுகிறது.

ஆகவே, அடித்தட்டு மக்களை உயர்த்தாத அரசு, நவீன தொழில் நுட்ப மாற்றங்களால் வளர்ச்சி அடைந்ததாகப் பட்டியலிட்டாலும், முடிவில் கோபம் மற்றும் ஆத்திரம் கொண்ட மக்களின் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை, இந்த நடப்புகள் காட்டுகின்றன.

- ஆசிரியர் -

# யாழ்நகருக்கு கடந்த இரு தினங்களில் 30 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் சுமார் 30ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் நகரில் திடீரென மக்கள் நெரிசல் அலை மோதியது பயணிகளின் வருகை திடீரென அதிகரித்தால் யாழ்நகரில் உள்ள உணவகங்களில் உணவுப் பண்டங்களுக்கு திடீர் பற்றாக்குறை நிலவியது?

அதனைவிட கடந்த சில மாதங்களாக பயணிகள் இன்றி வெறிச்சோடிய விடுதிகளும் திடீரென நிரம்பி வழிந்ததோடு சிலர் முற்றவெளியில் இரவுப் பொழுதை கழித்தனர்.

நயினாதீவுக்கு பெருமளவில் இந்த பயணிகள் சென்றதால் குறிக்கட்டு வான்துறையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

பயணிகள் படகுகள் குறைந்து காணப்பட்டதால் உடனடியாக மேலதிக படகுகள் சேவைக்கு அமர்த்தப்பட்டு பயணிகள் விரைவாக நயினாதீவுக்கு ஏற்றி செல்லப்பட்டனர்.

அதேபோன்று கசூரினாக் கடற்கரையிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இம்முறை அதிகளவில் அதிகரித்துக் காணப்பட்டன.

இது இவ்வாறிருக்க நகரில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கும் நேற்றுப் பெரும் கிராக்கி ஏற்பட்டது.

சந்தை வாய்ப்பின்றி தேங்கி கிடந்த புழுக்கொடியல், பனாட்டு,மோர் மிளகாய்,உட்பட அனைத்து வகை சார்ந்த உள்ளூர் உற்பத்தி பொருட்களின் வியாபாரமும் களைகட்டிக் காணப்பட்டது. (வி)

## பொலித்தீன்களினால் சுற்றுச் சூழல் மாசடைகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைப் பகுதியில் உள்ள பொது இடங்களில் பொலித்தீன் பைகளை வீசவேண்டாம் என்று மாநகர சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

மக்கள் பொலித்தீன்களை பொது இடங்களில் வீசி விடுவதனால் அவை காற்றினால் எடுத்துச்செல்லப்பட்டு சிதறுகின்றன. இவற்றால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் தொற்று நோய்களும் பரவும் அபாயமும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# பளையில் புதிய பஸ் நிலையம் நிர்மாணப் பணிகள் விரைவில்

நூற்றி இருபது இலட்சம் ரூபா செலவில் பளையில புதிய நவீன பஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக நேற்றுக் காலை பத்து மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் அவர்கள் அடிக்கல் நாட்டிவைத்தார்.

என்ரிப் மற்றும் வடக்கு மாகாண சபையின் நிதியிலிருந்து இந்த பஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கலினை நாட்டி வைத்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், அழிந்துபோன பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்திக்கு அனைத்து தரப்பினரதும் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் எனவும் அதன் மூலமே விரைவாகவும் நேர்த்தியாகவும். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியும் இதற்காகவே பெருபாலான ஒப்பந்த வேலைகளை அந்தந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது இதன் மூலம் இவர்கள் முழுமையான இலாப நோக்கமன்றி பிரதேசத்தின் அபிவிருத்தியை கருத்தில் எடுத்து பொறுப்புடன் செயற்படுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திரு.முகுந்தன் பிரதேச சபை செயலாளர் சிவபிரகாசம் பச்சிலைப்கள்ளி பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், சுந்தரலிங்கம் ஈ.பி.டி.பி கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் திருமதி சத்தியலீலா, வர்த்தக சங்க பிரதிநிதி குலேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.


# ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுக் குழு இன்று கூடுகின்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய வேட்புமனுக்குழு இன்று கூடவுள்ளது இந்தக் குழுவினர் இன்று முதல் எதிர்வரும் 20 ஆம திகதி வரை தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தோர்தலுக்கான வேட்பு மனுக்களை இம் மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் தாக்கல் செய்வதற்கு எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் போது கொழும்பு மாநகர சபையின் மேயர் உட்பட ஏனைய சபைகளுக்கான தலைமை வேட்பாளர்களை பெயரிடத் திட்டமிட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் தலைமை வேட்பாளர்கள் தொடர்பிலான இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பை தேசிய வேட்புமனுக்குழுவிடம் வழங்கியுள்ளாதக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.



## குடியியல் நிர்வாகத்திலிருந்து முப்படையினர் விரைவில் நீக்கம்

(கொழும்பு)

குடியியல் நிர்வாகப் பணிகளில் இருந்து முப்படையினரும் விரைவில் விலக்கிக்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்புப் பணிகளில் எதிர்காலத்தில் இலங்கை பொலிஸாரே ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## தம்பாலை கதிரிப்பாய் இந்து மயானத்தின் மண்டபங்களை திருத்தித்தருமாறு கோரிக்கை

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேசசபை நிர்வாகப் பகுதியின் தம்பாலை கதிரிப்பாய் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தம்பாலை இந்துமயானம் மற்றும் கதிரிப்பாய் இந்து மயானங்களில் உள்ள மண்டபங்ள் சேதமடைந்துள்ளதால் தகனக்கிரியைகளை மேற்கொள்வதில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால போர் நடவடிக்கையின் போது மிகவும் சேதமடைந்து இம்மண்டபங்களில் தகனக்கிரியைகளுக்காக செல்லும் போது வெயில் காலங்களிலும் மழைகாலங்களில் பெரும் அவஸ்தைகளுக்கு உள்ளாவதுடன் மழையில் நனைய வேண்டிய நிலையும் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை மயானங்களுக்குச்செல்லும் வீதிகளும் பல வருடங்களாகத் திருத்தப்படாமையால் இவ்வீதியால் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் தாம் பெரும் சிரமத்திற்கு உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (08)

# இலகு கடன் மூலம் சுண்டிக்குளத்தில் இறால் வளர்ப்பை மேம்படுத்த முன்னெடுப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சுண்டிக்குளம் கடற்பரப்பில் இறால் வளர்ப்பை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வது தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் ஆராய்ந்துள்ளதுடன் அத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி புளியம் பொக்கனையில் அமைந்துள்ள கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நேற்று முன்தினம் இறால் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் 250 இலட்சம் இறால்க் குஞ்சுகளை அக்கடற்பகுதியில் வளர்ப்பதற்கும், 03 மாத காலத்திற்கு அப்பகுதியில் கடற்றொழிலை மேற்கொள்ள முடியாது என்பதால் பாதிப்பை எதிர்கொள்ளும் கடற்றொழிலாளர்களுக்கு இலகு கடன் திட்டம் வழங்கவும் பின்னர் இறால் அறுவடைக்குப் பின்னர் இக்கடனை அளவிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மாகாண ஆளுநர் 10 தொடக்கம் 15 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். அத்துடன் கடற்றொழில அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பிலான ஆலோசனைக் குழு வொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இறால் வளர்ப்புத் திட்டத்தினூடாக அப்பகுதி மக்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொடுப்பதே இதன் எதிர்காலத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் இதற்கான வழிகாட்டல்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் கீழுள்ள தேசிய நீர்வள ஜீவிகள் நிறுவனம் வழங்குகிறது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலாளர் சிறினிவாசன் மற்றும் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் கணேசபிள்ளை ககடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று 12ஆம் திருவிழா



ஓசை எழுப்புகிறார் உள்ளத்தை தொட்டதனாற்
பூசையிலே எண்ணம் புகுந்துவிடும் - ஆசையெல்லாங்
காற்றாய்ப் பறந்துவிடுங் கந்தாவுன் நல்லூரில்
ஊற்றாகும் உள்ளத் தொளி.

- கந்தன் பாமாலை

மாலோன் மருகனே முருகனே முத்துக்குமரனே சரணம்
வேலோடு வந்தே எம் வினையொழிக்க வேண்டும்.
பாலோடு பழம் வைத்துப் பணிந்தேத்தினோம் முருகா
கோலோடு ஆண்டியாய் பழநியிலே அமர்ந்தாயோ குமரா!

- சைவப்புலவர் இராசையா சிறீதரன்.

வேல் பிடித்தே வரும் வேலழகன் - எம்
வேதனையைத் தீர்த்திடவே - அவன்
கால் பிடித்தே புது கவி பாடி
எக் காலமும் நாம் மகிழ்ந்திடுவோம்.

- சண்.

## மருதங்கேணி - பொற்பதி வீதியை மழைக்கு முன்னர் புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

மருதங்கேணியிலிருந்து பொற்பதி வரையான 3 மைல் தூர வீதி குன்றும் குழியுமாக மிகமோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடான போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தி யில் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்திற்கு பிரதான வீதியாகக் காணப்படும் இவ்வீதியில் பாடசாலைகள், சங்கங்கள், மத வழிபாட்டிடங்கள் என்பன அமைந்துள்ளதால் நாளாந்தம் இவ் வீதியால் அதிகளவிலான மக்கள் பயணம் செய்கின்றனர்.

கிடங்குகளும் கற்களுமாகக் காணப்படும் இவ் வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு பலமுறை தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்தியா சங்கத்தால் நடத்தப்பட்ட இந்திரா காந்தி ஞாபகார்த்த கட்டுரைப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று மாணவிகள் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

முதலாம் இடத்தை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்த சொரூபியா சிறிஜீவா பெற்றுள்ளார்.

ஆறுதல் பரிசில்களை யாழ். வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியைச்சேர்ந்த மாதங்கி நவகுமாரனும்ரொஷாணி அன்ரன் ராஜ்குமாரும் பெற்றுள்ளனர்.(08)

## காரைநகர் வெளிச்ச வீட்டை திருத்தி அமைக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகர் கோவளம் கடற்கரையில் அமைந்துள்ள புராதன வெளிச்சவீடு நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது பழுதடைந்து காணப் படுகிறது. ஐரோப்பியர் காலத்தில் சிறப்பாக செயற்பட்டு வந்த இவ்வெளிச்ச வீடு கடற்பயணிகளுக்கும் மீனவர்களுக்கும் மிகச் சிறந்த கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது.

இலங்கை தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் இவ்வெளிச்சவீடு புராதன நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காரைநகர் வடகிழக்கு ஜே.்.41 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இவ்வெளிச்ச வீட்டினை வடபகுதிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

தேசிய மரபுரிமைகள் அமைச்சு அல்லது சுற்றுலாத்துறை அமைச்சு இவ்வெளிச்ச வீட்டினைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

## வலிகிழக்கில் ஐவருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

(கோப்பாய்)

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வலிகிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐந்து பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடும் மழை தீவிபத்து போன்றவைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் அடுத்த கட்டக் கொடுப்பனவுகள் வழங்க்ப்படும் இதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். (08)

## சமுத்திர தேவா பழுது நுகர்வுச்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திர தேவாப் படகு பழுதடைந்துள்ளதால் பொருட்கள் ஏற்றும் சேவை பாதிக்கப்பட் டுள்ளது.

குறிகட்டுவானில் இருந்து கூடுதலான பொருட்களைக் கொண்டு செல்லும் இந்தப் படகு திடீரென ஏற்பட்ட கோளாறினால் பழுதடைந்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

## 30வருடமாக திருத்தப்படாத வீதி எப்போது புனரமைக்கப்படும்?

(கோப்பாய்)

வலி,கிழக்கு பிரதேச நிர்வாகப் பகுதியிலுள்ள தம்பாலை நாச்சிமார் வீதி கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப் படாமலும் எவராலும் கவனிக்கப்படாத நிலையில் இருப்பதால் வீதியால் செல்லும் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இவ் வீதிகள் மழை காலங்களில் பெரும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறது வாகனங்களில் போக்குவரத்துச் செய்வோர் என்று மில்லாத கஷ்டங்களின் மத்தியில் பிரயாணங்களை மேற்கொண்டுவருகின்றனர். இந்த விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் எதர்பார்க் கின்றனர். (08)



வவுனியா வடக்கு ஆலங்குளம் பகுதியிலுள்ள புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களுக்கான மாதிரி வகுப்பறைக்கட்டடத் திறப்பு விழாவில் வவுனியா வடக்கு கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.சிறிகரன் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைத்து பார்வையிடுவதையும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவர்கள் நிற்பதைக் காணலாம். (12)

# தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் முன்கற்கை நெறி நிலையம் ஆரம்பம்



இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் முன் கற்கை அங்கீகரிப்பு நிலையம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் 3.15 மணியளவில் பிரதியமைச்சர் துமிந்த திஸ்ஸ நாயக்க மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நோர்வே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் கனேடிய உலக பல்கலைக் கழக சேவையினரால் அனைத்து நவீன வசதியுடனான பெரியளவிலான கட்டடம் ஒன்று 80 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நோர்வே நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் ஜோன் ஒட்டோ, கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் இலங்கைக்கான பணிப்பாளர் இன்கிறிட் நட்சன், தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் திஸ்ஸ ஜினசேன மற்றும் இளைஞர் யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நிரந்தர மருத்துவர் இல்லாமையால் சிகிச்சையை பெறுவதில் மக்கள் சிரமம்

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனை கடந்த 5 ஆண்டுகளாக நிரந்தர மருத்துவர் எவரும் பணியில் இல்லாத நிலையில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதில் தாம் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

5ஆண்டுகளுக்கு முன்னர் பணியில் இருந்த மருத்தவர் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து இதுவரை வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை.எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ள நிலையில் மேற்படி வைத்தியசாலையில் வைத்தியர் எவரும் நியமிக்கப்படாமையால் இப்பிரதேச மக்கள் சிகிச்சைக்காக பிற இடங்களிலுள்ள வைத்தியசாலைக்கு நீண்டதூரம் சென்றே வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் இதில் குழந்தைகளும் முதியவர்களுமே பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மீளக்குடியமர்ந்த மக்களின் வைத்திய தேவையைக் கருத்தில் கொண்டு இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை விரைவில் நியமிக்குமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (121)

# முத்துமாரியம்மன் ஆலய உற்சவத்தில் 13 1/2 பவுண் நகைகள் திருட்டு

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள் மிகு முத்து மாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போது 13½ பவுண்தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலயத்தில் தேர்த் திருவிழா நடைபெற்ற போது மக்களுடன் மக்களாக நின்ற திருடர்கள் இந்த தங்கநகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகவும், வேறு ஒரு பெண்ணின் தங்கச்சங்கிலியினை திருடர்கள் அபகரிக்க முனைந்த போது அந்த சங்கிலியானது கழுத்தில் இருந்து அறுந்த நிலையில் அவரது சட்டைக்குள் விழுந்ததினால் திருடர்கள் தப்பிஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# நாடகக் கலையை புலம்பெயர் நாடுகளிலும் பரவச் செய்த பெருமைக்குரியவர் சிவத்தம்பி

## - மரிய சேவியர் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சிவத்தம்பிக்கு நாடகங்களை நெறியாள்கை செய்யும் பக்குவமும், தகுதியும் இருந்தது. இதனூடாக அவர் எமது நாடகத்துறையை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதிலும் அவர் முன்னின்று செயற்பட்டார் என திருமறைக்கலாமன்றம் நீ.மரியசேவியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி நினைவு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், பேராசிரியரின் நாடகத்துறைப்பிரவேசம் அவரை வானொலி நாடகங்கள்வரை கொண்டு சென்றிருந்தது. அத்துடன் நமது நாட்டின் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கெல்லாம் நேரடியாகச் சென்று கூத்துக்கலை அண்ணாவியார்களைச் சந்தித்து அவர்களின் கலை நுணுக்கங்களை ஆராய்ந்து அச்சு ஊடகங்களின் மூலம் வெளியிட்டதுடன் கூத்தினை நவீன மயப்படுத்தி நாடகமாக இயக்கிய பொருமையும் அவரைச் சாரும்.

நாடகம் பற்றி சுமார் 100 ஆய்வுக் கட்டுரைகளை அவர் வெளியிட்டிருக்கிறார். அத்துடன் பேராசிரியர் குழந்தை சண்முகலிங்கத்துடன் சேர்ந்து யாழ்.பல் கலைக்கழகத்தில் நாடகமும், அரங்கியலும் என்ற ஒரு பாடத்தைக் கொண்டுவந்த பெருமையும் அவரையே சாரும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர்கள் அ. சண்முகதாஸ் மனோன்மணி சண்முகதாஸ், மதிசூதனன், உட்பட பலர் உரையாற்றினார்கள். (பா)

# மோட்டார் சைக்கிள்களில் யாழ்.வரும் தென்பகுதி இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டைச் சுற்றி பார்வையிடுவதற்காக தென்பகுதியில் இருந்து சிங்கள இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களில் அதிகளவில் வருகை தருகின்றனர். அதிவேக மோட்டார் சைக்கிளில் வரும் இந்த இளைஞர்கள் குடாநாட்டைச் சுற்றிப் பார்வையிட்டு செல்கின்றனர். பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த இந்த இளைஞர் கோஷ்டி யாழ். திரையரங்குகளில் ஆர்வத்துடன் தமிழ்ப்படங்களையும் பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# கால்வாய் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி பளை நகரத்தின் வீதிகள் தற்போது அகலமாக்கப்பட்டு கால்வாய்கள் சிமெந்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பளை நகரத்தின் முழுமையான அபிவிருத்திப் பணிகள் நடைபெறாத நிலையில் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் பளை நகரவீதி அகலமாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (121)

# இலவச யோகாசன பயிற்சி வகுப்புக்கள்

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு சைவநற்பணி மறைத்தினால் ஆண்,பெண் இருபாலருக்குமான யோகாசனம், தியானம்,மூச்சுப் பயிற்சி,கராத்தே சூரிய நமஸ்காரம் ஆகிய வகுப்புக்கள் இலவசமாக நடைபெற்றுவருகிறது.

இந்த வகுப்புக்களில் இணைய விரும்பும் இருபாலாரும் திங்கள்,புதன்,சனி.ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 5.30 மணிமுதல் 7.30 மணிவரை நேரடியாக வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என மன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(15.08.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 30 ஆம் நாள்.

இராகுகாலம்7.35–9.05, சுபநேரம் 12.05 –1.35,

நட்சத்திரம்: சதயம் மு.இ 10.32 வரை

திதி: துதியை பி.இ 2.56 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணக் கஷ்டம் குடும்பத்தில் சலனம், மனச் சஞ்சலம், உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு.

**ரிஷபம:–** தேக ஆரோக்கியம், பண வரவு, தொழில் ஆதாயம், குடம்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் வருகை.

**மிதுனம் :–** பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச்சஞ்சலம், அதிகாரப் போட்டி, தெருவிபத்து.

**கடகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, தொழில் ஆதாயம், மனதில் மகிழ்ச்சி, சுவீப் அதிர்ஷ்டம்.

**சிம்மம்:–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, நண்பர், வருகை, தெரு விபத்து.

**கன்னி :–** குடும்பத்தில் மகிழ்ச்சி பணவரவு, நண்பர் தொல்லை, திடீர்ப் பயணம், மூத்தோர் ஆசி.

**துலாம் :–** பணக்கஷ்டம், குடும்ப்த்தில் குழப்பம், மனச்சஞ்சலம், அதிகாரப் போட்டி, உறவினர், வருகை.


**விருச்சிகம்:–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரவு, மனதில் மகிழ்ச்சி, தொழிலில் லாபம், தேக ஆரோக்கியம்.

**தனுசு:–** பண வரவு, தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, நண்பர் வருகை, மூத்தோர் ஆசி.

**மகரம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, திடீர் அதிர்ஷ்டம்.

**கும்பம் :–** பணக்கஷ்டம், நண்பர் தொல்லை, குடும்பத்தில் சலனம், திடீர்ப் பயணம், மனச்சஞ்சலம்.

**மீனம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், சுவீப் அதிர்ஷ்டம், நண்பர் வருகை.




நானுமென்ர அறுவத்தாறு வயசுச் சீவியத்தில உப்புடியொரு புதுமையைக் காணவுமில்லை: கேட்கவுமில்லை.

பூடகமாச் சொல்லுறது உங்களுக்கு விளங்கேல்லையே! அது தான் கோப்பாய் ராஜவீதில ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒண்டாத் தொங்கின விசயத்தைத்தான் சொல்றன்.

இயற்கை மற்ற செயற்கையான அனர்த்தங்களில ஆணும் பெண்ணும் மட்டுமே... குழந்தையள் பெரிய வயசாளியள் எண்டு நூறு ஆயிரமெண்டு செத்ததுதான்.

ஆனா உப்பிடியோ? வளைஞ்ச பனை மரத்தில ஏறி ரெண்டு பேரும் ஒரு நைலோன் கயிற்றின் ரண்டு தொங்கலிலேயும் தங்கட தங்கட தலையள்ல கொழுவிக் கொண்டு செத்துப் போறது?

இது புதுமைதான பின்னை! அவை தொங்கிக் கிடந்த வடிவைப் பாக்க வேணும். ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் முகமும் முகமும், உடலும் உடலும் உரசிக்கொண்டு கிடந்துதுகள்.

கட்டிப் புடிக்காததுதான் ஒருகுறை பாருங்கோ! இந்த மாதிரியான சாவை நீங்கள் உங்கட சீவியத்தில கண்டிருக்கிறியளே!

இதில பெரிய மர்மம் இருக்கு. வேறை யாரோ ரெண்டு பேரையும் வஞ்சம் தீர்க்க முடிச்சுப் போட்டு கொண்டந்து கட்டித் தொங்க விட்டிருக்கெண்டுதான் எனக்குப் படுகுது.

அதுக்காக என்னை வந்து புடிச்சுப் போடாதேங்கோ சொல்லிப் போட்டன். ஏனெண்டா எங்கட குடாநாட்டுப் பேப்பர்களில போட்ட செய்தியளைப் பார்த்துப் போட்டுத்தான் கதைக்கிறன்.

அதுகளிட்டை கள்ளத் தொடர்பு இருந்ததெண்டுதான் பேப்பர் செய்தியள் சொல்லுது. அப்ப மற்றவையெல்லாம் வெள்ளைத் தொடர்பே வைச்சிருக்கினம்.?

. சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலையெண்டு எப்பவோ சொல்லிப் போட்டாங்கள். அது அது அவனவனுடைய சுதந்திரம்: மற்றவை தலையிடக்கூடாது.

ஒழுக்கம், சமூக ஒழுங்கெண்டு சொல்ல வாறியள் இல்லையே? உதுமட்டும் சமூக ஒழுங்கோ? தெரியாமல் தான் கேக்கிறன்?

உப்பிடிச் செய்தவை என்ன எண்ணத்தில செய்தவை, இறைச்சியைத் திண்டா எலுப்பைக் கோத்துக் கட்டிக் கொண்டோ திரியிறதெண்டு சொல்லுவினம். இந்த மாதிரி அதிர்ச்சி வைத்தியம் பாத்தா, இனிமேல் உப்பிடியொண்டும் நடக்காதெண்டும் நினைக்கினமோ? அது தானில்லை: இன்னும் கூடும்.

உதையும் விட கொஞ்ச நாளைக்கு முன்னம் சாவகச்சேரியில நடந்த விசயம் கேள்விப்பட்டனீங்கள்தான? கனடாவில இருந்து வந்த புருஷன் பெண்சாதியை வெள்ளை வானில் கடத்தி இரண்டொரு மணிநேரத்தில பிணமாக்கினதை!

எங்கட சமுதாயம் எங்க போய்க்கொண்டிருக்கு? எனக்குத் தெரிஞ்சளவில நான் சொல்லுவன் வேறை ஆற்றையன் உயிரைப் பறிக்க ஆருக்கும் அருகதை கிடையாது செத்துக்கொண்டிருக்கிற உயிரை உன்னால குடுக்க முடியுமே? அப்பசெய் நான் வரவேற்பன்.

# பொன்விழா கால்பந்து வெற்றிக் கிண்ணம் கைப்பற்றிக்கொண்டது சென்சேவியர் அணி





(நெல்லியடி)

ரஞ்சித் மற்றும் கண்டீபன் ஆகியோரின் சிறப்பான தாக்குதல் ஆட்டத்தின் மூலம் வல்லை பொன்விழா கால்பந்து வெற்றிக் கிண்ணத்தை சக்கோட்டை சென்சேவியர் அணி கைப்பற்றிக் கொண்டது.

வல்லை விளையாட்டுக்கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சிக்குட்பட்ட கால்பந்து அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கால்பந்துத் தொடரிலேயே சென்சேவியர் அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி நேற்று முன்தினம் மாலை வல்லை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியும் சக்கோட்டை சென் சேவியர் அணியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணிகளும் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றிருந்தது. இருப்பினும் சென் சேவியர் அணியின் சிறப்பான பந்துப் பரிமாற்றம், வேகமான தாக்குதல் ஆட்டம் என்பன ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

முற்பாதி ஆட்டத்தின் 10ஆவது, 17ஆவது நிமிடங்களில் சென்சேவியர் அணி வீரர் ரஞ்சித் அடுத்தடுத்து இரண்டு கோல்களையும், 22ஆவது நிமிடத்தில் அவ்வணி வீரர் கண்டீபனும் மேலும் ஒரு கோலைப் போட சென் சேவியர் அணியின் முன்னிலை வகித்ததுடன் முற்பாதி ஆட்டத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் சென்சேவியர் அணியின் தாக்குதல் ஆட்டத்தையும், பந்துப் பரிமாற்றத்தின் உக்திகளையும் கண்டறிந்து புதிய வியூகங்களை ஆதிசக்தி அணியினர் வகுத்து வெற்றிக்காக முயற்சிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதும் சென்சேவியர் அணியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் ரஞ்சித் ஒரு கோலைப் போட தொடர்ந்து 23, 28ஆவது நிமிடங்களில் கண்டீபனும் தனது கணக்கில் இரண்டு கோல்களைப் போட்டுப் பதிவாக்கினார்.

மீண்டும் 31, 34ஆவது நிமிடங்களில் இரண்டு கோல்களை ரஞ்சித் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இறுதியில் சென்சேவியர் அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பொன்விழா கால்பந்து வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இதில் ஆதிசக்தி அணியினர் தனித்தனியே பந்து கொண்டு சென்று கோல் போட முயன்றதே தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்ததுடன், சென்சேவியர் அணி எட்டுக் கோல்களையும் போடக் காரணமாக அமைந்திருந்தது.

இப்போட்டியில் சென்சேவியர் வீரர் ரஞ்சித் ஐந்து கோல்களைப் போட்டதுடன் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், தொடரில் எட்டுக் கோல்களைப் போட்ட கண்டீபன் தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்கள். இதேவேளை, சிறந்த பின்வரிசை வீரராக சென்சேவியர் அணி வீரர் ஜோன் கனடியும், சிறந்த எதிரணி வீரராக ஆதிசக்தி அணியைச் சேர்ந்த குகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிண்ணத்தை வென்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 10.000 ரூபா பணப் பரிசும், இரண்டாமிடத்தைப் பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 5.000 ரூபா பணப் பரிசும், தொடர் நாயகன், ஆட்டநாயகன் விருதைப் பெற்றோருக்கு கையடக்கத் தொலைபேசியும் வழங்கப் பட்டது.

இப்போட்டி நிகழ்வில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை பொலிஸ் அதிகாரி, கால்பந்தாட்ட லீக் தலைவர்கள், அரச உயர் அதிகாரிகள், ரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (12)

## விளையாட்டு செய்திகள்

## மட்டுவில் வளர்மதி ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டத் தொடர் கிண்ணம் வென்றன வளர்மதி, இந்து இளைஞர் அணிகள்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கைதடி வளர்மதி மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வ்ளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் ஒன்றும், தென்மராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் ஒன்றும் நடாத்தப் பட்டது.

இப்போட்டித் தொடர்களின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியே முதலில் நடைபெற்றது. இதில் மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தியது. இறுதியில் கைதடி வளர்மதி அணி 3:2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியும் மோதியது. இதில் சிறப்பாக ஆடிய ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணி 3:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் ஏராளமான கரப்பந்தாட்ட ரசிகர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்ததுடன், வீரர்களுக்கும் உற்சாகமளித்தனர். (118)

## வெற்றியீட்டிய அதிஷ்டசாலிகள்

(நெல்லியடி)

வல்வை விளையாட்டுக்கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்துத் தொடரில், ரசிகர்களுக்கான போட்டி ஒனறை கஜ் நிறுவனம் நடாத்தியது.

எந்த அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் மற்றும் இறுதிப் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அணி எது போன்ற போட்டியை நேரில் கண்டுகளித்த ரசிகர்களுக்கிடையில் கஜ் நிறுவனம் நடாத்தியது.

இதில் ஏராளமான ரசிகர்கள் பங்கு பற்றியிருந்தனர். இருப்பினும் குலுக்கல் மூலம் நான்கு அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் வழங்கப் பட்டது.

வ.சுஜிவன், மேனன் மற்றும் இரண்டு பிரிவுகளில் பா. ஜெகனும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் பெருமளவான ரசிகர்கள் கலந்துகொண்டதையிட்டு அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், இந்த போட்டியை நடாத்துவதற்கு எமக்கு ஒத்துழைத்த வல்லை விளையாட்டுக்கழகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கஜ் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

ஏனைய பிரதேசங்களிலும் இது போன்ற போட்டிகள் நடாத்தப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (12)

## கிளிநொச்சி மத்திய கல்லூரியை இலகுவாக வென்றது மகாஜனா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கெதிரான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி இலகுவான வெற்றியைப் பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்று 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டத்திலேயே மகாஜனாக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் கஜிதன் 18, பிரசாந்தன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜன் ஒன்பது ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், ஜனந்தன் 4.3 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி 4.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது திலக்சன் 10, ஜனந்தன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை சரவணன் கைப்பற்றினார்.

இப்போட்டியானது இத்தொடரிலேயே மிகவும் குறுகிய நேரத்தில் நிறைவடைந்த போட்டியாகப் பதிவாகியுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (42)

## மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் மற்றும் கழக ஆண்கள் அணிகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டி ஒன்றை இம்மாத இறுதியில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகுப் பிரிவினர் நடாத்தவுள்ளனர்.

மாவட்ட மட்ட அணிகளுக்கிடையிலான நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடர் அணிக்கு 11 பேர்களைக் கொண்டதாகும்.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை அணிகள் மற்றும் கழக அணிகள் நாளை மறுதினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கேட்டுள்ளனர்.

இப்போட்டிக்கான நிரலிடல் நாளை மறுதினம் மாலை பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறும் என்றும் போட்டித் தொடரை இம்மாத இறுதியில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## டெஸ்டில் முதல் நிலையைப் பெற்றது உழைப்பிற்குக் கிடைத்த சிறந்த பரிசு

(லண்டன்)

ஓய்வின்றி கடின உழைப்பிற்குக் கிடைத்த பரிசாகவே டெஸ்ட் தரப்படுத்தலில் எமது அணி முதல் நிலையை எட்டுவதற்குக் காரணமாக அமைந்தது. இதற்கு வீரர்களின் திறமைகளுக்கு அப்பால் அணி நிர்வாகம், உதவியாளர்களுக்கும் பங்குண்டு என இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ரோர் தெரிவித்தார்.

டெஸ்டில் முதல் நிலை இடத்தை பிடிக்க வேண்டும் என்பது எங்களது நீண்டகால இலக்கு. அதனை எட்டியிருப்பது மிகவும் பெருமை அளிக்கிறது. அணியின் ஒவ்வொரு வீரர்களும் இதனை நினைத்து பெருமைப்பட வேண்டும். இந்த இடத்திற்கு வருவதற்காக நாங்கள் சில ஆண்டுகளாக ஓய்வின்றி கடினமாக உழைத்திருக்கிறோம். இந்த மைல்கல்லை எட்டியதில், வீரர்களுக்கு மட்டுமல்ல, அணி நிர்வாகம், உதவியாளர்களுக்கும் பங்கு உண்டு. ஒவ்வொரு தொடரையும்



வெல்ல வேண்டும் என்பது தான் எங்களது விருப்பம். அதனை இந்த வெற்றியின் மூலம் செய்து விட்டோம். கடைசி டெஸ்டிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் தெரிவித்தார்.

## நிரந்தரமில்லாதது முதல் நிலை நினைவுபடுத்துகிறாராம் டோனி

(லண்டன்)

முதல் நிலை இடம் யாருக்கும் நிரந்தர சொந்தமில்லை என்பதை நினைவுப்படுத்திக்கொள்கிறேன். இங்கிலாந்துக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் எமது ஆட்டத் திறனை நாம் வெளிப்படுத்தத் தவறிவிட்டோம் என்பதே உண்மையென இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.


இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் எங்களுக்கு எதுவுமே கைகொடுக்கவில்லை. நாங்கள் எங்களது முழுத் திறமைக்கு ஏற்ப விளையாடவில்லை. 60 முதல் 65 சதவீத திறமையைத்தான் வெளிப்படுத்தி இருக்கிறோம். எப்படி என்றாலும் தோல்வி தோல்வி தான்.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் நாங்கள் நிறைய முன்னேற்றம் காண வேண்டி உள்ளது. முதல் நிலை இடத்தைப் பிடித்த இங்கிலாந்துக்கு எனது வாழ்த்துகள். முதல் நிலை இடத்தை இழந்ததில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்



திருக்கலாம். ஆனால் முதல் நிலை இடம் யாருக்கும் நிரந்தர சொந்தமில்லை என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முச்சதம் பெறும் வாய்ப்பு தவறவிட்டது ஏமாற்றமே



(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், முச்சதத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்ட போதிலும், அதைப் பயன் படுத்திக் கொள்ளத் தவறி விட்டேன். எனினும் போட்டியில் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது என இங்கிலாந்து வீரர் அலெஸ்டர் குக் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் குக், 294 ஓட்டங்களைப் பெற்று ஆறு ஓட்டங்களால் முச்சதத்தைத் தவற விட்டார்.

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் 13 மணி நேரம் துடுப்பாட்டம் செய்த நிலையில், 300 ஓட்டங்கள் எடுக்க நல்ல வாய்ப்பு இருந்தது. கடைசியில் இதை எடுக்க முடியாதது சற்று ஏமாற்றமாக இருந்தது. இருப்பினும் முச் சதத்துக்கு மீதமுள்ள 6 ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை என்பதை விட, 294 ஓட்டங்கள் எடுத்தது மகிழ்ச்சி தான்.

இந்தப் போட்டியின் மூன்றாவது நாளில், பழைய பந்தில் ஓட்டங்கள் எடுப்பது சற்றுச் சிரமமாக இருந்தது. தவிர, ஆடுகளமும் சற்று மெதுவாக செயற்பட்டது. இதனால் முதலில் வேகமாக ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை.

## தொடர் தோல்வி ஆய்வு செய்ய முடிவு

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணி அடைந்துள்ள தொடர் தோல்வி குறித்து ஆய்வு செய்ய இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

கிரிக்கெட் சபையின் செயலாளர் என்.ஸ்ரீநிவாசன் இது குறித்து கூறியதாவது: இங்கிலாந்துத் தொடர் முடிந்த பின்னர், இந்திய வீரர்களின் விளையாட்டுத் திறன் குறித்து ஆய்வு செய்யப்படும். அதன் பின்னர் மாற்றங்கள் கொண்டு வரப்படும். இன்னும் ஒரு டெஸ்ட், ருவென்ரி 20 , ஒருநாள் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. எனவே உடனடியாக எந்த நடவடிக்கையோ, மாற்றமோ இருக்காது. இது ஒரு மோசமான கிரிக்கெட் தொடர். தோல்வி அடைந்தால் குறை கூறுவது சகஜமானதுதான். தோல்வியில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

## கடந்த பத்து ஆண்டுகளில் மோசமான டெஸ்ட் தொடர்

(கொல்கத்தா)

கடந்த 10 ஆண்டுகளில் உள்ளூர் மற்றும் வெளியூரில் இந்திய அணி மோசமாகச் செயற்பட்ட தொடர் இதுவாகத்தான் இருககும் என முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணி மிகவும் சாதாரண ஆட்டத்தை விளையாடியது என்ற விமர்சனத்தை நான் ஒத்துக் கொள்கிறேன். 3ஆவது டெஸ்ட் போட்டியில் 2ஆவது நாள் மிகவும் மோசமாக இருந்தது. இந்திய அணி 372 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை மட்டுமே கைப்பற்றி இருந்தது.

கடந்த 7 அல்லது 8 ஆண்டுகளில் உள்ளூர் மற்றும் வெளியூரில் இந்திய அணி மோசமாகச் செயற்பட்ட தொடர் இது



வாகும். இந்த ஒரு தொடர் தான் இந்திய அணிக்குச் சாதகமாக அமையவில்லை. சிறப்பாக செயல்படக்கூடிய ராவிட், டெண்டுல்கர் போன்ற வீரர்களின் ஆட்டம் கூட ஏமாற்றம் அளித்தது. இந்திய அணி முதல் நிலை இடத்தில் இருக்க வேண்டும் என்று இந்திய மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள். டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாகச் செயற்பட வேண்டியது முக்கிய அம்சமாகும். எனவும் அவர் தெரிவித்தார்.

## அரையிறுதியில் அஷ்வினி ஜோடி



(லண்டன்)

உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடரின் அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை, இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி ஜோடி தகுதி பெற்றுள்ளது.

லண்டனில், உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த இரட்டையர் பிரிவுக் காலிறுதியில், இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி ஜோடி, இந்தோனேஷியாவின் விட்டாமரிசா, நட்யா ஜோடியைச் சந்தித்தது. இதன் முதல் செட்டை 17-21 என இழந்த ஜுவாலா ஜோடி, பின் எழுச்சி பெற்று இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டை கைப்பற்றியது. இதன் மூலம் இந்த ஜோடி 17-21, 21-10, 21-17 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில் ஜுவாலா ஜோடி, சீனாவின் டியான்குயிங், ஜாயென்லே ஜோடியை எதிர்கொள்கிறது.

## 19 வயதுக்குட்பட்டோர் கால்பந்து வெளியானது போட்டி அட்டவணை

(துபாய்)

எதிர்வரும் 2012ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோர் உலக கோப்பை கால்பந்துத் தொடருக்கான போட்டி அட்டவணையை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோர் உலகக் கோப்பை கால்பந்துத் தொடரில் இந்தியா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து உட்பட, மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன.

நடப்பு சம்பியனான அவுஸ்ரேலிய அணி "ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ளது. இத்துடன் இங்கிலாந்து, நேபாளம், அயர்லாந்து அணிகள் உள்ளன.

இந்திய அணி "சி" பிரிவில் இடம் பிடித்துள்ளது. இந்தப் பிரிவில் சிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவு, பப்பு நியூகினியா அணிகளும் உள்ளன.

"பி" பிரிவில் பாகிஸ்தான், நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து அணிகளும்,

"டி" பிரிவில் இலங்கை, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் மற்றும் நமீபியா அணிகளும் இடம்பிடித்துள்ளன.

## இந்தியாவின் போபண்ணா ஜோடி தோல்வி


(மான்ட்ரியல்)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின், இரட்டையர் பிரிவின் காலிறுதியில் இந்தியாவின் போபண்ணா ஜோடி தோல்வி அடைந்தது.

கனடாவின் மான்ட்ரியல் நகரில், ஆண்களுக்கான ஏ.டி.பி., ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதியில், இந்தியாவின் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி, அமெரிக்காவின் பாப்பிரையன், மைக்பிரையன் ஜோடியை எதிர் கொண்டது.

இதில் போபண்ணா, குரேஷி ஜோடி 3-3 என நிலையில் இருந்த போது, இந்திய வீரர் போபண்ணாவிற்கு இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் பாப்பிரையன் ஜோடி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் சார்பில் பங்கேற்ற அனைத்து வீரர்களும் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து இந்திய அணியின் ரோஜர் கோப்பைக் கனவு தகர்ந்தது.

மிகுந்த நம்பிக்கையுடன் இத்தொடரில் ஆடியபோதும் வெளியேறியது வேதனை தரும் ஒன்றாக அமைந்துள்ளது. இருப்பினும் அடுத்த வரும் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்று போபண்ணா, குரேஷி ஜோடி தோல்வியின் பின் குறிப்பிட்டனர்.



ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறிய மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பெலரசின் விக்டோரிய அசரென்கா. கனடாவின் மான்ட்ரியலில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றே இவர் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த விக்டோரிய அசரென்கா: அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடுவதே எனது முதல் இலக்கு என்றும், அதற்காக கடுமையாகப் போராட வேண்டி வரும் என்றும், அதை வெளிப்படுத்தும் வகையில் எனது ஆட்டம் அமையும் என்றும் குறிப்பிட்டார்.

## கூடுதல் விலைக்கு சிமெந்தினை விற்பனை செய்த மூவர் கைது

(கொழும்பு)

கூடுதல் விலைக்கு சிமெந்து விற்பனையில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்கள் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூடுதல் விலைக்கு சிமெந்து விற்பனை மற்றும் பதுக்கி வைத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிறி குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 250ற்கும் அதிகமான சிமெந்து மூடைகளை நுகர்வோர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

### முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடுவோர்

## கச்சதீவுக்குள் நுழைவதைத் தடுக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை



(கொழும்பு)

கச்சதீவு முற்றுகைப் போராட்டத்தினை எதிர்கொள்ள இலங்கைக் கடற்படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக அரசியல்வாதிகள், தமிழ் உணர்வாளர்கள் மற்றும் மீனவர்களால் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கச்சதீவு முற்றுகைப் போராட்டத்தினை எதிர்கொள்ளவதற்காக பெருமளவான கடற்படையினரை அப்பகுதிக்கு அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கச்சைதீவையும் அதன் அண்டிய பிரதேசத்தையும் இலங்கைக் கடற்படை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் தயாராகும் அதே வேளை, தேவைப்படும் பட்சத்தில் பலாலி விமான நிலையத்தின் ஊடாக விமானப் படையை கச்சதீவுப் பிரதேசத்துக்கு அனுப்பவும் பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

முற்றுகைப் போராட்டத்தின் மூலம் கச்சதீவுக்குள் உள்நுழைவதனைத் தடுக்கும் வகையிலான அனைத்து எற்பாடுகளுடனும் தயாராக இருக்குமாறு கடற்படை, விமானப்படை ஆகியவற்றுக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## தேர்தல் செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று தேர்தல்கள் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தேர்தல்கள் இடம் பெறும் மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வேட்பு மனுத் தாக்கல் தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெறும் என தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகும் வேட்பு மனுத் தாக்கல் நடவடிக்கைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம் பெறும்.

இந்த நிலையில் சுயேட்சைக் குழுக்கள் தமது வேட்பு மனுக்களை 24ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தாக்கல் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோதுமையிலிருந்து அகற்றப்பட்டுவரும் தவிட்டின் அளவைக் குறைக்க தீர்மானம்


(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் கோதுமையிலிருந்து அகற்றப்படும் தவிட்டின் அளவை 20வீதம் வரை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய நடைமுறைக்கமைய கோதுமையிலிருந்து 26 வீத தவிடு அகற்றப்படுகின்றது. இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் கோதுமையிலிருந்து 74 வீதம் மாத்திரமே மாவு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மாவில் அதிகளவில் காபோஹைதரேட் அடங்கியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.கோதுமையிலிருந்து அகற்றப்படும் தவிட்டில் அதிகளவில் விட்டமின்கள் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதற்கமைய கோதுமையின் போசாக்கு மிக்க பகுதிகள் தவிட்டுடன் நீக்கப்படுவதாகவும் இவ்வாறு நீக்கப்படும் தவிடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு 80 வீத



தவிட்டினைக் கொண்ட கோதுமையைப் பயன்படுத்தி மாவை உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குக் கோதுமை மாவை விநியோகிக்கும் இரண்டு நிறுவனங்களிடமும் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

## நிபுணர் குழு அறிக்கை பரிந்துரைக்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### ஐ.நா வலியுறுத்துவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளின் படி இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐ.நா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஐ.நா பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கைக்கு இதுவரை அதிகாரபூர்வமான பதிலை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையின் சில பகுதிகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளதாக இம்மாத முற்பகுதியில் கூறியிருந்தார்.

இதற்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்கத் தவறினால், எதிர்க்கட்சி தவறுகளைக் கண்டுபிடிக்கும் என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால்,இலங்கை அரசிடம் இருந்து ஐ.நாவுக்கு முழுமையான பதில் கிடைக்கவில்லை என்றும்,விரைவில் பதில் கிடைக்கும் என்று நம்புவதாகவும் ஐ.நா பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியுள்ளார்.

ஐ.நா அறிக்கையில் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய பரிந்துரைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அவற்றை இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்றும் பர்ஹான் ஹக் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுபோக நெல்லை களஞ்சியப்படுத்த போதிய களஞ்சிய வசதிகள்


(கொழும்பு)

சிறுபோக நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற்குத் தேவையான வசதிகள் அரசாங்கத்திடம் உள்ளதென கூட்டுறவு மற்றும் உள்நாட்டுவர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்வனவு செய்யப்படும் நெல்லைக களஞ்சியப்படுத்தி வைப்பதற்குரிய வசதிகள் இல்லையென தெரிவிக்கப்படும் கருத்து உண்மைக்குப் புறம்பானது

நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதிகள் இல்லையென சில பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மத்தியில் அச்சம் நிலவுகின்றது இத்தகைய பிரச்சினைகள்



எதுவும் கிடையாது 75 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குரிய வசதிகள் தற்போது அரசாங்கத்திடம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## பதனிடப்பட்ட உணவு பொதியிடல் சர்வதேச கண்காட்சி கொழும்பில்

(கொழும்பு)

பதனிடப்பட்ட உணவு மற்றும் பொதியிடல் தொடர்பான சர்வதேச கண்காட்சி எதிர்வரும் 26 27 28 ஆகிய தினங்களில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் 300 காட்சிக் கூடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன சார்க் நாடுகளின் உற்பத்தியாளர்கள் தமது காட்சிக் கூடங்களை இங்கு அமைக்கவுள்ளனர்.

இலங்கையில் இதுவரைக்கும் 4,400 நிறுவனங்கள் பதனிடல் மற்றும் பொதியிடல் துறையில் ஈடுபட்டு வருவதாகவும் சுமார் 1 லட்சத்து 36 ஆயிரம் பேர் வரை இதில் பணியாற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் சிறுவர் பணியகம் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸ் சிறுவர் பணியகம் ஒன்றை ஆரம்பிப்பது தெடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

இந்தப் பணியகத்தை ஆரம்பிப்பது குறித்து ஏற்கனவே பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க கூறியுள்ளார்.

சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களைத் தடுக்கும் வகையில் பொலிஸ் சிறுவர் பணியகம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தபால் மூலமான வாக்களிப்பிற்கு 25ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்




(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் நிறைவுபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட 10இடங்களில் தபால் மூல வாக்காளர்களின் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன

இதனைத் தவிர உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள மாவட்டங்களின் பிரதேச செயலகங்களிலும் தபால் மூல வாக்காளர்களின் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் செயலகம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## கிழக்கில் பொலிஸாரின் விடுமுறைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தொடர்ந்து அங்குள்ள பொலிஸார் அனைவரினதும் விடுமுறைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் பொலிஸ் தலைமையகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை சுற்றறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலைப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் ரவீந்திர வைத்தியாலங்கார தெரிவித்துள்ளார். அத்துடன் கிழக்கு பொலிஸ்நிலையங்களில் பணியாற்றும் விடுமுறையில் உள்ள பொலிஸார் அனைவரையும் உடன் பணிக்குத் திரும்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் பரிசோதனை நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் 2011ஆம் ஆண்டிற்கான பொலிஸ் பரிசோதனை நடவடிக்கை நேற்றுக் காலை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவிட்டகே தலைமையில் இடம்பெற்ற பொலிஸ் பரிசோதனையின் போது பொலிஸாரின் அணிவகுப்பு பொலிஸாரின் பாவனைக்கான வாகனங்களின் உறுதியான தன்மை மோட்டர் போக்குவரத்து பொலிஸார் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள்களின் தன்மை தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளியைப் பூரணப்படுத்துக.

(காசோலை, பூக்கள், வாகனப்புகை, காலநிலை, அணில், சுத்தமான, நன்னீரில், மண்புழு, வெட்டுக்கிளி)

51. சூழல் ........................................ காரணமாகவும் மாசடைகின்றது.

52. எமது தொழிலைப் பாதிப்பதில் வானிலையும்,........................................யும் காரணமாகின்றன.

53. கொடுக்கல் வாங்கலில்........................................பயன்படுத்தப்படுகின்றது.

54. ........................................விவசாயியின் நண்பன் என அழைக்கப்படுகின்றது.

55. மீன்கள் ........................................மூலம் சுவாசிக்கின்றன.

56. ........................................முட்டையிட்டு இனம் பெருகாத ஒரு பிராணியாகும்.

57. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு ........................................நீரிலேயே முட்டையிடும்.

58. விரால் மீன் ........................................வாழும் மீனினமாகும்.

பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.

59. கூ.மொ.வி.நி. - ........................................

60. இ.போ.ச. - ........................................

61. கி.பி. - ........................................

62. இ.மி.ச. - ........................................

63. இ.ரு.கூ. - ........................................

64. மு.ப. - ........................................

எனது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி என்னும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

65. ........................................
........................................

66. ........................................
........................................

67. ........................................
........................................

68. ........................................
........................................

69. ........................................
........................................

70. ........................................
........................................





தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்

கல்வி முரசு


வெளியீடு 27




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


தலைப்புக்கேற்ற படத்தைத் தெரிந்து இலக்கத்தை அட்டவணையில் குறிக்க.


01.



(1)



(2)



(3)



(4)


(5)


(6)



(7)


(8)


(9)


(10)


(11)


(12)

| தரைப்போக்கு வரத்துச் சாதனம் | தொடர்பு சாதனம் | விமானப் போக்கு வரத்துச் சாதனம் | துணி உற்பத்தி பொருட்கள் | கடற் போக்கு வரத்துச் சாதனம் | தளபாட உற்பத்தி பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 1)................ | 3)................ | 5)................ | 7)................ | 9)................ | 11)................ |
| 2)................ | 4)................ | 6)................ | 8)................ | 10)................ | 12)................ |

பிரசின்னங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

13) பி.ப. 2.15 இற்குப் பயணத்தை ஆரம்பித்த தில்சான் மீண்டும் வீட்டுக்கு பிற்பகல் 5.10 இற்கு வந்தான். அவனது பயணத்திற்குச் செலவிட்ட காலத்தைக் காண்க.

........................................

14) தொழுவத்தில் இருந்த 14 மாடுகளினதும், 6 ஆடுகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

........................................


**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்

விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்



15. இப்பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது?

....................................................................................

16. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?

....................................................................................

17. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?

....................................................................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

18. பெரிய .................................... 19. நகரம் ....................................

20. தூர .................................... 21. பரந்த ....................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

22. அழகு .................................... 23. முகம் ....................................

24. வீதி .................................... 25. வாஞ்சை ....................................

26. கோயில் .................................... 27. பெரிய ....................................

28. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

....................................................................................

29. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1)........................ 2)........................ 3)........................

30. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக.

....................................................................................

**நாடக நிகழ்வுக்காக விற்கப்பட்ட நுழைவுச் சீட்டு தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

| வகுப்பு | நுழைவுச் சீட்டு விலை |
|---|---|
| விசேட வகுப்பு | ரூ. 200.00 |
| முதலாம் வகுப்பு | ரூ. 100.00 |
| இரண்டாம் வகுப்பு | ரூ. 50.00 |
| மூன்றாம் வகுப்பு | ரூ. 30.00 |

31. விசேட வகுப்புச் சீட்டுக்கள் 150 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

....................................................................................

32. முதலாம் வகுப்புச் சீட்டுக்கள் 100 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

....................................................................................

33. 2ஆம் வகுப்புச் சீட்டுக்கள் 200 விற்றிருப்பின் கிடைத்த பணம் எவ்வளவு?

....................................................................................



34. 3ஆம் வகுப்பு சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

....................................................................................


35. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க.

....................................................................................

36. மொத்தமாக விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?

....................................................................................

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் காலை உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




37. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

....................................................................................

38. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

....................................................................................

39. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக்குறைந்தளவானோர் உண்ட உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ....................................................

40. இடியப்பம் உண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

....................................................................................

41. எத்தனை மாணவர்கள் இட்லியை சாப்பிட்டிருக்கின்றனர்?

....................................................................................

42. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன, அவற்றை 3 லொறிகளில் ஒரேயளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

....................................................................................

**தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

43. ஸ்துதிய ....................................................

44. ஆயுபோவன் ....................................................

**தரப்பட்ட சொல்லுக்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

45. ஆசிரியர் .................................... 46. சாரதி ....................................

47. விவசாயி .................................... 48. தாதி ....................................

49. தபாற்காரன் .................................... 50. வைத்தியர் ....................................



## முதலையுடன் விபரீத விளையாட்டு

தாய்லாந்து நாட்டுக்குத்துச்சண்டை வீரர் ஒருவர் முதலை ஒன்றின் வாய்க்குள் தனது தலையை நுழைத்தபோது சனக் கூடடத்திலிருந்து ஏற்பட்ட கைதட்டல் வானைப பிளந்தது. இந்த வீரர் மயிர்சிலிர்க்கவைக்கும் செயலைச்செய்து பார்வையாளர்களை அதிர்ச்சி யடைய வைக்கிறார். இவர் முதலையின் மூக்கில் முத்தமிடும் காட்சி அனைவரையும் கவர்ந்துள் ளது. தென்கிழக்கு தாய்லாந்தின் பட்டாயா நகரி லுள்ள சுற்றுலாப்பயணிகளுக்கான நிகழ்ச்சியொன்றில், பயங்கரமான இந்த ஊர்வன வகைப்பிராணியின் வாய்க்குள் தனது தலையை விட்டு உயிரைப்பணயம் வைத்துள்ளார்



பொதுவாக முதலையின் ஒரு கடியே மனித னின் மண்டையோட்டினை நொறுக்கிவிடும். அத்துடன் இதுபோன்ற வகை முதலை 6மீ. நீளத்திற்கும் ஒரு தொன் நிறைக்கும் வளரக்கூடியது. த மில்லியன் இயர்ஸ் ஸ்ரோன் பூங்காவும் பட்டாயா முதலைகள் பூங்காவும் வருடம் ஒன்றிற்கு ஆயிரக் கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கின்றன. நாளாந்தம் இந்தப்பூங்காக்களில் வெற்றுக்கைகளுடன் முதிர்ந்த முதலைகளுடன் ஆட்கள் விளையாடும் நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.


## அதிசயம் ஆனால் உண்மை



ஈரோட்டில் சண்டைக்காக வளர்க்கப்படும் காட்டுச் சேவல் ஒன்று 12ஆம திகதி முட்டையிட்ட அதிசயம் நிகழ்ந்தது. ஈரோடு காவிரிக்கரையைச் சேர்ந்த வர் மணி. பத்தாண்டுகளாக காட்டுச்சேவல்களை வளர்த்து விற்பனை செய்து வருகிறார். 12 ஆம் திகதி காலை சேவல் ஒன்று இட்ட முட்டை பழுப்பு நிறத் தில் பட்டன் காளான் போல இருந்தது. இதைக் கண்ட அவர் சேவல்க ளுக்குள் நடந்த சண்டையில் உடல் உறுப்பு ஏதும் அறுந்து விட்டதோ என நண்பர்களை அழைத்துக் காண்பித்தார். முட்டையை அறுத்துப் பார்த்த போது உள்ளே ஐந்து அடுக்குகளில் வெள்ளை கருவும் ஒரு மஞ்சள் கருவும் இருந்தது.


தகவலறிந்து சுற்றியுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் முட்டையிட்ட சேவலையும் முட்டையையும் அதிசயமாக பார்த்து சென்றனர். ஈரோடு கால் நடை மருத்துவ ஆராய்ச்சிக்கழக டாக்டர் பாலசுப்பிரமணியம் கூறிய தாவது: உயிர்களில் ஆணிடம் X.Y குரோ மோசோம்களும், பெண்ணிடம் எக்ஸ் எக்ஸ் குரோசோம்களும் இருக்கும். ஆனால் இவ்வகை சேவல்களுக்கு X.X.Y. அல்லது X.Y.Y.குரோ மோசோம்கள் இருக்கும். இவை இரண்டும் கெட்டான் தன்மையுடன் கருப்பை மற்றும் விதைப்பை ஆகிய இரண்டும் கொண்டிருக்கும். எப்போதாவது அரிதாக முட்டையிடும் கோழிகளுடன் இணையவும் செய்யும். இம்முட்டையை மக்கள் பயன்படுத்த மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## ஏ.சி பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்



ஏ.சி வசதியுடன் கூடிய பைக் ஐரோப்பிய நாடுக ளில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் விலை ரூ.34 லட்சம். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெரவ்ஸ் என்ற நிறுவனம் கேபினுடன் கூடிய பைக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. ஹேண்ட்பார், 2 வீல்கள் ஆகியவை வழக்கமான பைக் போல. உட்கார சற்று அகலமான சீட். வண்டியை நிறுத்தி இறங்கும் போது பலன்ஸ் தவறாமல் இருக்க சிறுவர்களின் சைக்கிள் போல இரு புறமும் உதவிக்கு 2 மினி சக்கரங்கள். இடது, வலது எந்தப் பக்கமும் இறங்கலாம். ஏறி அமர்ந்து கதவை மூடிக்கொண்டால் முன், பின் சக்கரங்கள் மட்டுமே வெளியே தெரியும் காற்சட்டையில் சேறு, சகதி அடிக்கிற இம்சைகள் கிடையாது. முன் பின்னால் பக்கங்களை பார்க்க பைபர் கண்ணாடி. எடை சற்று அதிகம் என்பதால் அதற்கேற்ப ரேஸ் பைக் இன்ஜின் பொருத்தியிருக்கின்றனர். ஏ.சி வசதியும் செய்யப்பட்டுள்ளது. மினி கார் அளவுக்கு தரமாக உருவாக்கப்பட்டிருப்பதால் விலை அதிகம். ரூ.34 லட்சம். "மோனோடிரேசர்" என்று பெயர் வைத்திருக்கின்றனர். சுவிட்சர்லாந்து மட்டுமின்றி பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மோனோடி ரேசரை அதிகம் காண முடிகிறது. பைக் தயாரிப்பில் முன்னணியில் உள்ள பல நிறுவனங்களும் ஏ.சி.பைக் தயாரிப்பு பக்கம் பார்வையைத் திருப்பியிருக்கின்றன. அவர்களும் களமிறங்கினால் விலை குறையலாம்.

## மிக வேகமான சூரியசக்திக்கார்



ஒக்ரோபரில் அவுஸ்ரேலியாவில் நடை பெறப்போகும் World Solar Challenge போட்டியில் வெற்றி பெறப்போகும் கார்களில் Nuna6 காரும் ஒன்று. அவுஸ்ரேலியாவில் ஒக்ரோபர் 16 - 23 ஆம் திகதிக்கிடையில் நடைபெறப்போகும் World Solar Challenge எனும் அரையாண்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இது அவுஸ்ரேலியாவிற்குக் கப்பலில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நடைபெற்ற 5 World Solar Challenge போட்டிகளில் நான்கு போட்டிகளில் இது வெற்றி பெற்றிருந்தது. இது நெதர்லாந்தின் டெல்.ஃ.ப் தொழினுட்பப்பல்கலைக்கழகத்தின் Nuon solar Team இனால் உருவாக்கப்பட்டுள்ளது.

இது இம்முறை DSM எனும் தொழிநுட்ப நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டதால் உடற்பகுதியை மிகவும் நிறை குறைந்ததாகச்செய்துள்ளதாகக் குறிப்பிடுகின்றது. இதனால் தன்னுடன் போட்டியிட்ட கார்களை விட இது தற்போது பலமாக உள்ளதெனலாம். இதற்கு முன் உருவாக்கப்பட்ட Nuna5 இனைவிட இது 10 வீதம் குறைந்த நிறையையுடையது என அண்மைய பரிசோதனைகள் கூறுகின்றன. Nuna5 தான் 2009 இல் இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்தது. Nuna6 ஆனது, 2001 இல் உருவாக்கப்பட்ட முதலாவது Nuna மாதிரியின் நிறையை விட அரைவாசி நிறை கொண்டதாகவும் இக்குடும்பத்தில் 4.4மீ. நீளமே கொண்டதால் மிகவும் சிறிய காராகவும் காணப்படுகின்றது.


இதில் 1690 சூரிய மின்கலங்கள் 6 சதுரமீற்றரில் காணப் படுகின்றன. 21 லிதியம்-அயன் மின்கலங்களின் மூலம் மணிக்கு 5 கிலோவாற்ஸ் சக்தி கிடைக்கின்றது. இலத்திரனியல் மோட்டா ரானது தனியான பின்புறச்சில்லுடன் பொருத்தப்பட்டுள்ளது. டார்வின்னிலி ருந்து அடெலெய்ட்டிற்கு அலிஸ் ஸ்பிறிங்ஸ் வழியாக 3,081 கி.மீ. இனை யும் கடந்து இதுவே முதலாவதாக வருமென நம்புகின்றனர் இதன் படைப்பாளர்கள்.

## ஐபோனில் சாட் செய்ய

பேஸ்புக் ஸ்கைப்புடன் இணைந்து வீடியோ சாட்டிங்க் வசதியை அறிமுகப்படுத்தியிருந்தது. எனினும் அதில் குழுவினராக சாட்டிங்க் செய்யும் வசதிகள் இல்லை. அக்குறையை நிவர்த்தி செய்ய உதவுகிறது TinyChat எனும் இலவச ஐபோன் App. இதன் மூலம் iPhone 3GS, iPhone 4, iPod touch (3rd generation), iPod touch (4th generation) and iPad ஆகிய டிவைஸ்களில் இருந்து பேஸ்புக் நண்பர்களுடன் வீடியோ சாட்டிங்கை மேற்கொள்ளலாம். TinyChat ஐ இயக்குவதற்கு iOS 4.3 அல்லது அதற்கு மேம்பட்ட பதிப்புத் தேவை. இதன் சிறப்பம்சம் ஒரே நேரத்தில் பேஸ்புக்கில் இருக்கும் 12 நண்பர்களுடன் வீடியோ சாட்டிங் செய்யக்கூடிய வசதியாகும். உங்கள் Ibit]py; TinyChat ஐ இயக்கிய பின்னர் பேஸ்புக்கில் லாகின் செய்து 12 பேர் கொண்ட சாட் ரூமை உரு வாக்கிய பின்னர் வீடியோ சாட் செய்து மகிழலாம்.

தரவிறங்க:- http://itunes.apple.com/pk/app/id451331904

## Face Book மூலம் Photo fis Zoom செய்ய



Face Bookஇல் நாம் சாதாரணமாக படங்களைப் பார்க்கும்போது அவை சிறியவையாகவே காணப்படுகின்றன. இவற்றைப் பெரிதாக்கிப்பார்ப்பதற்கு நாம் அப்படத்தினை புதிய பக்கத்தில் திறந்தே பெரிதாக்கிப் பார்க்கின்றோம். ஆனால் அப்படிச்செய்யாமல் அதே பக்கத்தில் வைத்தே பெரிதாக்கிப் பார் க்கலாம். இதற்காக ஒரு நீட்சி ஒன்று உள்ளது. இதனை நீங்கள் தரவிறக்கி நிறுவிக்கொண்டால் போதும்.

இதற்கான கூகிள் குறோமின் நீட்சியைப் பெற கீழுள்ள இணைப்பை கிளிக் செய்யுங்கள்.

https://chrome.google.com/webstore/detail/elioihkkcdgakfbahdoddophfngopipi

FireFox நீட்சியைப்பெற கீழுள்ள இணைப்பை கிளிக் செய்யுங்கள்.

https://addons.mozilla.org/en-us/firefox/addon/facebook-photozoom/

கணினி மூலை

## நோய்களை குணப்படுத்த இப்படியும் வழியா?



இந்தோனேசியாவில் வாழும் மக்கள் ஒரு புது முறையான வைத்தியத்தைத் கண்டு பிடித்து உள்ளனர். அந்த ஊரில் வாழும் மக்கள் அங்குள்ள தண்ட வாளங்களில் வந்து படுக் கின்றனர். இது அவர்கள் உடம்பில் உள்ள சில நோய களைக் குணமாக்குவதாகச் சொல்கின்றனர். ஒரு வரு டத்திற்கு மேலாக இவர் கள் இதைச் செய்கின்ற னர். இதற்கு நல்ல பயன் இருப்பதாகவும் கூறுகின்ற னர். இங்குள்ள மக்கள் எலெக்ட்ரிக் ரயில் தண்டவாளங்களில் மின்சக்தி உள்ளதால் அது தங்கள் வியாதிகளை குணமாகுவதாகச் சொல்கின்றனர். ஆனால் இவர்கள் இப்படிச் செய்வது ரயிலில் வரும பயணிகளையும் ரயில் ஓட்டுநர்களையும் மிகவும் பயமுறுத்துகிறது.அதனால் இந்த ஸ்டேஷன் அதிகாரிகள் பயப்பட வேண்டாம் என அறிவிப்பு பலகைகள் வைத்துள்ளனர்.

பொலிஸ் இவர்களை அகற்ற எவ்வளவோ முயன்றும் முடியாததால் இப்படி செய்ததாகச் சொல்கிறார்கள். நோய் குணமாக்கப்போய் ரயிலுக்குள் தலையை விடாமல் இருந்தால் சரிதான்.. இந்த முட்டாள்களை எங்கே கொண்டு போய் நிறுத்துவது?




# தமிழ் ஈழம் மலரும் என்றால் ஆட்சியை இழக்கக் கூட தயார் என்று அறிவித்தவன் நான் - கருணாநிதி அறிக்கை




(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள கேள்வி - பதில் வடிவிலான அறிக்கையில், தி.மு.க. ஆட்சியிலே இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையெல்லாம் பேரவையில் ஜெயலலிதா சுட்டிக்காட்டி, அவைகள் எல்லாம் 'கண் துடைப்பு நாடகங்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறாரே? என்ற கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். மேலும இலங்கைத் தமிழ்களுக்காக தான் மேற்கொண்ட செயறபாடுகள் முயற்சிகள் அனைத்தையும் திகதிவாரியாக அந்த அறிக்கையில் பட்டியலிட்டுள்ளார் கருணாநிதி.

1956 ஆம் ஆண்டிலேயே சிதம்பரம் தி.மு.க. பொதுக்குழுவிலே அண்ணா முன்னிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை முன்மொழிந்தவனே நான்தான்! என்பதில் தொடங்கி, 15.10.2008 அன்று பிரதமருக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கடிதம் எழுதியதும் நான்தான். 13.11.2008 அன்று உணவுப் பொருட்கள், துணிவகைகள் மற்றும் மருந்துப் பொருட்களை இலங்கைத் தமிழர்களுக்காக கப்பல் மூலம் அனுப்பி வைத்ததும் நான்தான். 2009ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்காக சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது - இலங்கையிலே தமிழ் ஈழம் மலரும் என்றால், அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என்று அறிவித்தவன் நான்தான் என்பது வரை விரிவாக அறிக்கையிட்டுள்ளார்.

மேலும், அப்துல் கலாமை இரண்டாவது முறையாக குடியரசுத் தலைவராக விடாமல் தடுத்தது நீங்கள்தான் என்று விஜயகாந்த் பேசியிருக்கிறாரே? என்ற கேள்விக்கு, பைத்தியக்காரர்களின் உளறலுக்கெல்லாம் பதில் சொல்லி காலத்தையும் கண்ணியத்தையும் வீணாக்க நான் விரும்பவில்லை. நான் எழுதிய 'தொல்காப்பியப் பூங்கா' புத்தகத்திற்காக - 'தொல்காப்பியர்' விருதினை எனக்கு வழங்கி - அந்த விழாவில் அவர் ஆற்றிய உரையையும் அறியாதவர்கள் இப்படியெல்லாம் சொல்கிற பொய்யை யார் நம்புவார்கள்? என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

## ஷம்மி கபூர் மரணம்

(மும்பை)



பழம்பெரும் ஹிந்தி திரைப்பட நடிகர் ஷம்மி கபூர் நேற்றுக் காலை காலமானார். உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஹிந்தித் திரையுலகின் பிதாமகரான ராஜ் கபூர் குடும்பத்தைச் சேர்ந்த இவருக்கு வயது 79.

1950-60 களில் தனித்துவமான நடிப்பால் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர். 1953இல் ஜீவன் ஜோதி படத்தில் அறிமுகமானவர். அறிமுகப் படமே அவருக்கு பெரும் பெயரைப் பெற்றுத் தந்தது.

1961இல் ஜங்கிள் படம் அவரை புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றது. 1968இல் பிரம்மசாரி படத்தில் இவரது நடிப்புக்காக பிலிம்பேர் விருது கிடைத்தது. மேலும் பல விருதுகளைப் பெற்ற நடிகரின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பிரபல நடிகர் அமிதாப்பச்சனின் ஆராக்ஷன் படத்திற்கு எதிர்ப்பு

(சென்னை)





இடஒதுக்கீட்டுக்கு எதிரானவன் என்ற உப தலைப்போடு திரைக்கு வந்துள்ள அமிதாப் பச்சனின் ஆராக்ஷன் திரைப படத்துக்கு அரசியல் கட்சிகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்கள கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

மத்திய அரசின் இடஒதுக்கீடு கொள்கையை கேவலமாக கிண்டலடிக்கும் காட்சிகளும், வசனங்களும் ஆராக்ஷன் படத்தில் இடம் பெற்றுள் ளன. இவற்றை நீக்கவேண்டும் என்று கண்டித்து உபி, பஞ்சாப் மற்றும் ஆந்திரா ஆகிய மூன்று மாநில அரசுகள் இந்தப் படத்துக்குத் தடை விதித்துள்ளன.

இந்தப் படத்தை தடை செய்யக்கோரி சென்னையிலும் சத்யம் தியேட்டர் முனபு பாட்டாளி மக்கள் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேற்று முன்தினம் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு ஆர்ப்பாட்டம் செய்திருந்தது. பொதுவாக நடிகர் அமிதாப்பச்சன் மீது அனைத்துப் பிரிவினருக்குமே அபிமானம் உண்டு. ஆனால் இந்தப் படத்தில் நடித்ததன் மூலம் அரசியல் கட்சிகளிடம் மட்டுமல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களின் வெறுப்புக்கும் ஆளாகியுள்ளார் அமிதாப் பச்சன். வடஇந்தியாவில் பல்வேறு இடங்களில் இந்தப் படத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்துள்ளன. அமிதாப் மற்றும் அந்தப் படத்தின் பேனர்களைக் கொளுத்தி வருகின்றனர் அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும்.

## அ.தி.மு.க.விற்கு பாடம் கற்பிக்கும் நேரம் நெருங்குகிறது - ஸ்டாலின்

(சென்னை)



அ.தி.மு.க.வுக்கு பாடம் கற்பிக்கும் நேரம் நெருங்குகிறது என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை ஆவடி யில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு தீர்மானங்கள் விளக்கப் பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

தேர்தல் தோல்விக்குப் பிறகுதான் தி.மு.க. மிகுந்த எழுச்சியோடு இருக்கிறது. மூன்று மாதங்களிலேயே இந்த எழுச்சியைப் பெற்றிருக்கிறோம்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது அ.தி.மு.க. எழுச்சி பெறுவதற்கு நான்கரை ஆண்டுகள் தேவைப்பட்டது. தோல்வி கண்டதும் அவர்களைப் போல் வெளிநாட்டில் போய் நாம் ஒளிந்துகொள்ளவில்லை.

இந்திரா காந்தி ஏற்படுத்திய நெருக்கடி நிலையையே சந்தித்தவர்கள் தி.மு.க.வினர். இப்போது அ.தி.மு.க. அரசு மிரட்டுவதைக் கண்டா அஞ்சுவார்கள்? தி.மு.க. என்கிற இயக்கத்தை அழிக்க நினைக்கிறவர்கள்தான் அழிந்து போயிருக்கின்றனர் என்று அவர் பேசினார்.

## கருணாநிதி குடும்பத்தின் ஆதரவு வர்த்தகர் கைது

(சென்னை)



தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கதை வசனத்தில் உருவாகிய திரைப்படங்களின் தயாரிப்பாளரும் பிரபல லொத்தர் நிறுவன உரிமையாளருமான மார்ட்டின் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் மிகச் செல்வாக்காக இருந்தவர் மார்ட்டின். தி.மு.க. 'முதல் குடும்பத்துக்கு' குறிப்பிட்ட சில அசையாச் சொத்துக்கள் சில இவரால கிடைத்தவைதான் என்று கூறப்படுகிறது.

கருணாநிதி கதைவசனத்தில் பிரசாந்த் நடித்து தற்போது வெளியாகியிருக்கும் பொன்னர் சங்கர் படத்தின் தயாாிப்பாளர் இவர்தான். பாடலாசிரியர் பா. விஜய் நடித்த இளைஞன் படத்தின் தயாரிப்பாளரும் இவரே.

சேலத்தில் 49 இலட்சம் ரூபாய மதிப்புள்ள சொத்தை மோசடி செய்து விற்பனை செய்த புகாரிலேயே மார்ட்டின் கைது செய்யப்பட்டுள்ளார். ஆண்டுக்கு, 7,200 கோடிக்கு மேல் வர்த்தகம் செய்யும் இவரை, 2008ல், 2,112 கோடி ரூபாய் சேவை வரி செலுத்தவில்லை என, வருமான வரித்துறை குற்றம் சாட்டியுள்ளது.

இவரைக் கைது செய்து விசாரித்தால், கருணாநிதி குடும்பத்தின் மேலதிக சொத்துக்கள் சிலவற்றைப் பற்றிய விபரங்கள் கிடைக்கலாம் என்று பொலிஸ் தரப்பில் நம்புகிறார்கள்.

## இலங்கை அகதிகள் சென்னையில் கைது

(சென்னை)

சென்னை சர்வதேச விமான நிலையத்தில், இலங்கையர் இருவர் போலிக் கடவுச் சீட்டுக்கள் மற்றும் வீசாக்களை வைத்திருநத நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கட்டார் விமானத்தில் பயணிப்பதற்கு முற்படுகையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னைக்கு அகதிகளாகச் சென்ற ஆர்.தாமோதரம், மற்றும் கே.மனோகரன் ஆகியோர் மடிபபாக்கம் மற்றும் பொழிச்சலூர் போன்ற அகதி முகாம்களில் கடந்த 10 வருடங்களாக சட்டவிரோதமாகத் தங்கியிருந்ததாக தமிழகக காவல்துறை தெரிவித்தது.

இதேவேளை, அவர்கள் சுவிடசர்லாந்து மற்றும் பிரான்சுக்குச் செல்வதற்கான பயணச் சீட்டுகளையும் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. திருச்சியில் உள்ள முகவர் ஒருவரிடம் சட்டவிரோதமான முறையில் தலா இரண்டு இலட்சம் இந்திய ரூபாய்க்கு இந்தியக் கடவுச் சீட்டுகளைப் பெற்றுள்ளனர்.

## மூன்று தமிழர்களின் உயிர் காக்க மூண்டெழு தமிழகமே! - ஆர்ப்பாட்டம்


(சென்னை)



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலிருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரது கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி தள்ளுபடி செய்துள்ளதை அடுத்து தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருக்கின்றது.

பிழையாக வழங்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்யும் அதிகாரம் ஜனாதிபதி மற்றும் மாநில ஆளுநர்களுக்கு உண்டு. இதன்படி, தமிழக முதல்வர் ஜெயலலிதா, பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரது கருணை மனுக்களை மறுபடியும் பெற்று, தமிழக ஆளுநர் மூலம் அவர்களது தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில், தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கு காங்.தலைவர் தங்கபாலு வரவேற்பு



(சென்னை)

முருகன், பேரறிவாளன், சாந்தன் கருணை ஆகியோரது கருணைமனு நிராகரிக்கப்பட்டதை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வரவேற்கிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை நியாயமானதே என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.வி.தங்கபாலு நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை மிகக் கொடுமையானது. அதை எப்படி மண்ணிக்க முடியும் அந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் தப்பக்கூடாது, தப்ப விடக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

# ஏமன் மீண்டும் குலுங்கியது
# இலட்சக்கணக்கானோர் பேரணி



(சனா)

ஜனநாயக உரிமைகள் கோரி ஏமன் நாட்டில் நடைபெற்ற பேரணிகளில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர். ஜனாதிபதியாக இருக்கும் அலி அப்துல்லா சலே, தற்போது சவூதி அரேபியாவில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் நாடு திரும்பமாட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் எதிரிக்கட்சிகள் மற்றும் மாற்றத்திற்காகப் போராடி வரும் இளைஞர்கள் அமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரு தேசிய கவுன்சிலை உருவாக்க வேண்டும் என்று போராடி வரும் அமைப்புகளிடமிருந்து கோரிக்கை எழுந்து வருகிறது.

ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி புரட்சிகர இளைஞர் அமைப்பு விடுத்த அறைகூவலை ஏற்று வெள்ளிக்கிழமையன்று இலட்சக்கணக்கான மக்கள் அணிவகுத்தனர். ஏமனின் தலைநகர் சனா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் மக்கள் எழுச்சிக்கு ஆதரவான பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி செய்த மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு அவர் மீது விசாரணை நடத்தி தண்டனை வழங்க வேண்டும் என்று பேரணிகளில் பங்கேற்றவர்கள் முழக்கமிட்டனர்.

ஜனவரி மாதத்திலிருந்து மக்கள் எழுச்சிகரமான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். 1978 ஆம் ஆண்டிலிருந்து பதவியில் ஒட்டிக்கொண்டிருந்த அலி அப்துல்லா சலேயின் ஆட்சிக்கு முடிவு கட்டி, உண்மையான ஜனநாயகத்தைக் கொண்டு வரும் வரையில் ஓய மாட்டோம் என்று போராடி வரும் இளைஞர் அமைப்பு கூறியுள்ளது. ஊழல் மற்றும் வேலையின்மை மற்றும் நாட்டைப் பீடித்திருக்கும் பெரும் கேடான விடயங்களை அகற்றும் வகையில் மாற்றம் இருக்க வேண்டும் என்று அந்த இளைஞர் அமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

# ப்ரூஸ் லீயின் மேலங்கிக்கு 77 ஆயிரம் டொலர்கள்



மறைந்த குங் ஃபூ நட்சத்திரம் ப்ரூஸ் லீ நடித்த இறுதிப் படத்தில், அவர் அணிந்திருந்த மேலங்கி (கோட்) ஹொங்கொங்கில் 77 ஆயிரம் டொலர்களுககு ஏலத்தில் விற்பனையாகியிருக்கின்றது.

இது தவிர, அவரது கடிதமொன்றும் பெயர் விபர அட்டையொன்றும் அடங்கலாக இன்னும் வேறு 12 பொருட்களும், மொத்தமாக 200 ஆயிரம் டொலரகளுக்கும் அதிக தொகைக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

கேம் ஓஃப் டெத் என்ற திரைப்படத்தில் ப்ரூஸ் லீ அணிந்திருந்த, மிருகங்களின் தோல்மயிரைக் கொண்டு தைக்கப்பட்ட இந்த கோட்டை எதிர்பார்க்கப்பட்ட விலையை விட 9 மடங்கு அதிக விலைக்கு அமெரிக்காவைச் சேர்ந்த ரசிகர் ஒருவர் வாங்கியுள்ளார்.

1940 ஆம் ஆண்டு நவம்பர் 27 இல் பிறந்த ப்ரூஸ் லீ, மிகக் குறுகிய காலத்திலேயே புகழின் உச்சியைத் தொட்டவர். குங் ஃபூ தற்காப்புக் கலையின் அடையாளச் சின்னமாக உலகெங்கிலும் மதிக்கப்படுபவர். 1973 ஆம் ஆண்டில் தனது 32 ஆவது வயதில் உயிரிழந்த ப்ரூஸ் லீ, தற்காப்புக் கலைகளின் ஸ்தாபகர், பயிற்றுனர், திரைப்பட நடிகர், திரைப்பட இயக்குனர் மற்றும் திரைக்கதை ஆசிரியர் என பல துறைகளிலும் பங்களிப்பைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# சுதந்திரதேவி சிலை மூடப்படுகிறது



(நியூயோர்க்)

அமெரிக்காவின் லிபர்ட்டி தீவில் உள்ள சுதந்திரதேவி சிலை, பராமரிப்புப் பணிகள் காரணமாக, ஓராண்டுக்கு மூடப்பட உள்ளது. அமெரிக்க சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக, பிரான்ஸ் நாடு, சுதந்திரதேவி சிலையை அமெரிக்காவுக்கு அன்பளிப்பாக கொடுத்தது.

இந்தச் சிலை நிறுவப்பட்டு, வரும் ஒக்டோபர் மாதத்துடன் 125 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள், சுதந்திர தேவி சிலையைச் சுற்றிப் பார்த்துச் செல்கின்றனர். இந் நிலையில், பராமரிப்புப் பணிகளுக்காக சிலை ஓராண்டுக்கு மூடப்படவுள்ளது.

பிரமாண்டமான இந்தச் சிலையின் கீழிருந்து தலையில் உள்ள கிரீடம் வரை ஏறிச் செல்ல படிகள் உண்டு. கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின், சிலையின் உள்ளே படிகளில் ஏறிச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. பராமரிப்புப் பணிகளுக்காக, 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# கலவரத்தின்போது பேஸ்புக், டுவிட்டர் மூடப்பட்டிருக்க வேண்டும்!



(லண்டன்)

பிரித்தானியாவில் இடம்பெறற கலவரத்தின் போது பேஸ்புக் மற்றும் ருவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்கள் மூடப்பட்டிருக்க வேண்டும் என கன்சர்வேட்டிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான Louise Mensch வலியுறுத்தினார். இதனை பிரதமரான டேவிட் கமரூன் நடைமுறைப்படுத்தியிருக்க வேணடும் என்றும் அவர் கூறினார்.

கலவரம் பற்றிய தகவல்கள் இவற்றின் மூலமே வேகமாகப் பரவி பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் கலவரக்காரர்கள் மத்தியில் உற்சாகத்தையும் கொடுத்தன. கலவரம் பற்றிய தகவல்கள், படங்கள் சமூக வலைத் தளங்கள் மூலம் பரப்பப்பட்டு விவாதங்களும் இடம்பெற்றன.

சமூக வலைத் தளங்கள் என்பவை ரயில் நிலையங்கள், வீதிகள், பஸ்க்ள் என்பவற்றை விட முக்கியமானது அல்ல... இவற்றை மூடுவதால் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டு விடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யூரோவில் நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. முகாமைத்துவ உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர், களஞ்சியப் பொறுப்பாளர், உதவியாளர், காவலாளிகள் (இரவு, பகல்), வாகனச்சாரதி. தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் விண்ணப்பங்களை 20.08.2011 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தாபனப் பிரிவு, யூரோவில், 45 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

நல்லூர் பிள்ளையார் அச்சகத்திற்கு அச்சகத்துறையில் அனுபவமுள்ளவர்கள், கணனி இயக்குநர் (ஆண், பெண்) முகாமையாளர் (பெண்), புத்தகம் கட்டுதல், வெட்டுதல், **KOTD** இயக்குநர் பதவிகளுக்கு வெற்றிடம் உண்டு. பயில விரும்புபவர்கள் நல்லூர் கோவிலுக்கு முன்பாக உள்ள அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் உள்ள ஆண்கள் விடுதிக்கு ஆண் விடுதிப் பராமரிப்பாளர் தேவை. வயது-35 மேற்பட்ட கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ளவர்கள் Hanna's Relief Swedish Mission, 19/1, Beach Road, Mount Lavinia அல்லது elimcvh@gmail.com என்ற முகவரிக்கு சுயவிபரக்கோவையை அனுப்பிவைக்கவும்.

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் வைத்திய சாலைக்கு தாதி, பயிலுநர் தேவை. O/L கல்வித் தகைமை உடைய 18 - 22 வயதுடைய, தங்கிநின்று பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் மட்டும் பணிப்பாளரை 0777588729 இற்குத் தொடர்புகொள்ளவும்.

ASTP TEC (PVT) Ltd இற்கு Computer Hard ware techician தேவை. ஆற்றல் உள்ளவர்கள் சுயவிபரக்கோவை 18.08.2011 இற்கு முன்னதாக ASTP TEC (PVT) Ltd, Po.Box 158, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

கையடக்கத் தொலைபேசி நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் என்.மொபைல், இல.11, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 3817 இற்குத் தொடர்புகொள்ளவும்.

**Techno world studies (Pvt) Ltd** நிறுவனத்திற்கு வவுனியா, யாழப்பாணம், கிளிநொச்சி, தண்ணீருற்று, முருங்கன், செட்டிக்குளம் கிளைகளில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. Course Covnselors (பெண்), Branch Managers (ஆண் / பெண்), Computer Instructor ஆற்றலும் ஆர்வமும் உடையவாகள் சுயவிபரக் கோவையை 21.08.2011 இற்கு முன்னதாக The Human Resource Manager, Techno world Studes (Pvt) Ltd, No. 05, Station Road, Karappankadu, Vavuniya என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். குறிப்பு - கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் பதவி, பணியாற்ற விரும்பும் இடம் என்பவற்றைக் குறிப்பிடவும்.

தையல் வேலையில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 134, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் அல்லது 0774211551 இற்குத் தொடர்புகொள்ளவும்.

வவுனியா தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு பெண் எழுதுவினைஞர் தேவை. மேலதிக விபரங்கள் அறிய 0776059585 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு பிரதம குருக்கள், உதவிக் குருக்களும் உடனடியாகத் தேவை. தகுதியுடையவர்கள் 109, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12, 0112436831 இற்கு நேரில் வரவும்.

வவுனியாவில் உள்ள பிரபலமான புடவைக் கடைக்கு விற்பனையாளர் தேவை. (வேலை பழக விரும்புபவர்களும் தேவை) ஆர்வமுள்ளவர்கள் 0772200635, 0242226100 இற்குத் தொடர்புகொள்ளவும்.

வெள்ளவத்தையில் உள்ள மனநலம் குன்றிய மாணவர்களின் பாடசாலைக்கு பெண் பயிற்சி ஆசிரியர்கள, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், பயிற்சி லிகிதர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் The Pirector, Chrisman Associates, Po.Box 1023, Colobmo என்ற முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

வாகனம் திருத்தியமைக்க (**Tinkering**) நல்ல அனுபவமுள்ள ஒப்பந்த அடிப்படையில் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777133487, 07555101294 இற்குத் தொடர்புகொள்ளவும்.

நிறுவனம் ஒன்றிக்கு இணையத்தளம் (web page) அமைக்க ஆள் தேவை. ஆற்றல் உள்ளவர் 0777542940 இல் தயாளனைத் தொடர்புகொள்ளவும்.

தனியார் நிறுவனத்திற்கு **Graphic Designing** மற்றும் தமிழ் **Type Setting** செய்யக்கூடியவர்கள் தேவை. ஆற்றல் உள்ளவர்கள் 0775732445 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

**Metecno Lankd (pvt) Ltd** இன் யாழ்ப்பாண கிளைக்கு **SALES COORDINATOR** தேவை. 26 வயதிற்கு மேற்பட்ட கணினி மற்றும் ஆங்கில அறிவுடைய ஆர்வமுள்ள ஆண்கள 17.08.2011 இல் 2 - 5 மணிவரை Euroville Gust House, 17, Agravian Servive lane (off point pedro Road) Nallur, Jaffna என்னும் முகவரிக்கு நேரில் வரவும்.

# மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகும்

(கொழும்பு)

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 56 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. இது 2014 இல் 98 பில்லியன் டொலர்களாக உயரந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று வெளிநாட்டு உல்லாசப் பயணத்துறை அதிவேகமாக வளர்ச்சியடைந்து வருடத்திற்கு 600 மில்லியன் டொலர்களை வருமானமாகப் பெற்றுக்கொடுக்கிறது. "த எக்கொனமிக் டைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கடந்த 30 ஆண்டு காலமாக எவ்வித அபிவிருத்தியும் இடம் பெறாதபோதிலும், யுத்தம் முடிவடைந்து இரண்டாண்டு காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் வேகமாகத் துளிர்விட ஆரம்பித்துள்ளன.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு இலங்கை அரசாங்கம் யுத்தம் முடிவடைவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்னரே தேவையான ஏற்பாடுகளை செய்தது. அறிகின்றோம். வடக்கு கிழக்கின் மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்கு அடுத்த 3 ஆண்டு காலத்தில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சி 14 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்றும் "த எக்கொனமிக் டைம்ஸ்' தெரிவித்துள்ளது.

# கண்நோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கண்நோயின் தாக்கம் மக்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றன. தற்போதைய கடும் வெப்பம் வறட்சி போன்ற காலநிலையில் தான் இந்த கண்நோய் ஏற்படக் காரணம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கண்நோய் குணமடைய குறைந்தது ஐந்து நாட்களுக்கு மேல் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வி)

# பொத்துவிலில் கைது செய்யப்பட்ட இருபது பேர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் கைது செய்யப்பட்ட 20 சந்தேக நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவிலில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது இவர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை சந்தேகநபர்கள் பொத்துவில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரகளை தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவை நீதிவான் ஏ.ஜி அலொக்ஸ் ராஜா பிறப்பித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தவர்கள் எனத் தெரியவருகின்றது.

பல்வேறு தேவைகளுக்காக கிராமங்களுக்கு வருபவர்கள் மீது எவ்வித காரணத்தையும் கேட்டறியாமல் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சட்ட உதவிகளைப் பெறுவதை விடுத்து எவ்வித விசாரணையும் இன்றி இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக பாரபட்சமின்றி சட்டம் நடைமுறைப்படுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.


கிராமத்திற்கோ அல்லது தோட்டத்திற்கோ வந்துள்ளவர்கள் தொடர்பில் சந்தேகம் நிலவுமானால் 119அல்லது 118 ஆகிய அவசர இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு அறிவிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# இலத்திரனியல் நிறுவைக் கருவிகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையில் தற்போது இலத்திரனியல் டிஜிற்றல் நிறுத்தல் அளவைக் கருவிகளே வியாபாரிகளால் கூடுதலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிறுத்தல் அளவைகளால் நீண்டகாலமாகப் பாவிக்கப்பட்ட தராசுப்படிகள் தற்போது படிப்படியாக அருகிச் செல்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (வி)



# நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு

## தினமுரசு நாளிதழ் நடத்தும் மாபெரும் பொது அறிவுப் போட்டி

பங்குபற்றுங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!

1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன், சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எநத மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதனை எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசைமேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட்செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 1 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

## நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- போட்டி முடிவுகள் நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று அறிவிக்கப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்கு பற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தொ.பேசி இலக்கம்: .................... ....................

கையொப்பம்

# ஆட்டம் காணும் பொருளாதார நிலை உலக வங்கித் தலைவர் எச்சரிக்கை


(சிட்னி)

உலக பொருளாதாரத்தில் காணப் படும் ஸ்திரத்தன்மையற்ற போக் கால் உலக நாடுகள் பல ஆபத் தான கட்டங்களை எதிர் நோக்கும் அபாயம் இருக்கிறது, என்று உலக வங்கி தலைவர் ரொபேர்ட் ஷோய லிக் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளா தார ஸ்திரநிலையை, கடந்த வாரம் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் நிறுவனம் குறைத்து அறிவித்தது.

இதன் எதிரொலியாக சர்வதேச பங்குச் சந்தைகளில் நிலையற்ற தன்மை தோன்றியுள்ளது. ஐரோப் பிய யூனியனில் அங்கம் வகிக் கும் நாடுகளின் பொருளாதார நிலையிலும் சரிவு அபாயம் ஏற் பட்டிருக்கிறது.

தற்போது நாம் புதிய பொரு ளாதார சரிவின் ஆரம்ப கட்டத் தில் இருக்கிறோம். ஆனால், இது கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார சரிவு



போன்று இருக்காது. இருப்பி னும், வளர்ந்த நாடுகளின் பொரு ளாதாரம் தொடர்ந்து ஆபத்தான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. வளர்ந்த நாடுகள் பொருளாதார கொள்கைகளை சீர்படுத்தினால், மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு திரும்ப முடியும் என்று உலக வங்கியின் தலைவர் ரொபேர்ட் ஷோயலிக் கூறியுள்ளார்.

# தாவடியில் விபத்து; யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மழை பெய்யும் வேளையில், மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து வந்த யுவதி கால் சறுக்கி விழுந்து விபத்துக் குள்ளாகி தலையில் படுகாயமடைந்ததுடன், சுயநினை வற்ற நிலையில் யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தாவடிச் சந்தி யில் நேற்று மாலை 3.00 மணிய ளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் உடுவில் கிழக்கைச் சேர்ந்த கிருஷ் ணபாலா சிவமலர் (வயது-38) என்பவரே ஆவார்.

இவர் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## வடக்கில்....

தடை செய்யப்பட்ட பிரமிட் வடிவிலான திட்டங்களில் பொது மக்கள் முதலீடு செய்வது பாதுகாப்பற்றதுடன், சட்டவிரோதமா னதுமாகும். பொதுமக்கள் தமது பணத்தினை அனுமதி பெற்ற வங்கி களிலும் நிதி நிறுவனங்களிலும் மட்டுமே முதலீடு செய்ய வேண்டும். இத்தகைய பிரமிட் திட்டங்களை குறைந்தளவு சனத் தொகை உள்ள பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதால், பொது மக்களே பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. எனவே, பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு பாதுகாப்பற்ற திட்டங்ககளில் முதலீடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் இலங்காபதி ஸ்ரீதரன் கேட்டுக்கொண்டார்.

இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்துள்ள ‘தடை செய்யப் பட்ட பிரமிட் திட்டங்கள்’ தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சிறப்புரை ஆற்றும் போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர், யாழ்.மாவட்டத்தில் பிரமிட் கட்ட மைப்பினைக் கொண்ட திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், இத்திட் டத்தில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த பல்வேறு மட்டத்தினரும் இணைந்து கொண்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளன.

இத்தகைய திட்டங்கள் சட்ட ரீதியான அனுமதிகளைப் பெற்று நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தில் இணைவதற்கு அதிகமான வளத்தினை முதலீடு செய்ய வேண்டியுள்ளதாகவும், அங்கத்தவர்களை இணைக்க வேண்டியுள்ளதும், இத்திட்டத்தினை அடையாளம் காணக்கூடிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணம் மற்றும் சனத்தொகை குறைவான பகுதிகளில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாது. இத்திட்டத்தில் இணையும் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு முழுமையான பாதிப் புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

இத்தகைய சட்டத்திற்கு முரணான திட்டங்களில் 50 வீத திட்டங் கள் வடமாகாணத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே பொதுமக்கள் அனைவரும் விழிப்புடன் செயற்பட்டு இத்தயை திட்டங்களில் முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சட்டவிரோதமானதும், சமூகத்திற்கு தீங்கிளைக்கும் திட்டங்களில் முதலிடுவதால் சட்ட ரீதியான தண்டனைகளையும் எதிர்கொள்ள நேரிடும். வங்கித் தொழில் சட்டம் (2) பிரிவின் கீழ் இது சட்ட விரோதமானது.

எனவே, இத்தகைய திட்டங்களில் முதலிட வேண்டாம் என கிராமங்கள், உபநகரங்கள் தோறும் விழிப்புணர்வுகளைச் செய்துள் ளோம். பாதுகாப்பான முதலீட்டு நடவடிக்கைகளை மட்டும் செய்யு மாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரி வித்தார்.

இக்கருத்தரங்கில், அரச ஊழியர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். (எஸ்).

## தொழில்நுட்ப....

இதற்கமைய பட்டம் பெறும் தினத்தில் தமது தொழில், சம்பள விபரம், சேவை நிறுவனம் பற்றிய தகவல்களை பட்டதாரிகள் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. இதுத் தொடர்பிலான படிவமொன்று பல்கலைக்கழகங்களின் ஊடாக விநியோகிக் கப்படுவதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

## வன்னியில்...

காற்றுடன் தூக்கி வீசப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. குடி யிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்ததினால் அப்பகுதிகளில் பொது மக்களின் இயல்பு வாழக்கை பாதிக்கப்பட்டது. (77, எஸ்)

## உள்ளூர்.....

இடம்பெற்றது. உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குறுதியளித்தமை க்கு அமைவாகத் தேர்தல் வெற் றியைத் தொடர்ந்து உடனடியா கவே மக்களை நாடி அரச இயந் திரம் நகர ஆரம்பித்துள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் தலை மையில் அனைத்து அரச திணைக் களங்களினதும் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு நேற்றையதினம் நெடுந்தீவில் மக்கள் பணிக்காக களம் இறங்கியது.

இக்குழுவினர் அப்பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற் காக நெடுந்தீவு றோமன். கத்தோ லிக்க மகளிர் கல்லூரியில் நடமா டும் குறைகேள் செயலகம் ஒன்றை நடாத்தினர். இங்கு பொதுமக்க ளின் பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டதுடன், பல பிரச்சினைகளுக்கு அந்த இடத்திலேயே பொருத்தமான தீர்வுகளும் எட்டப்பட்டன.

நெடுந்தீவின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கும், மக்களின் குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வைக் காணும் வகையிலும் அப்பகுதி யில் காணப்படும் குளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் முதல் கட்டமாக வெட்டுக் கிளிக் குளத்தை ஆழமாக்கும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் பாதுகாப்பு விடயம் எனும் போது மூடப்பட்டுள்ள வீதி கள் திறக்கப்பட வேண்டும். மற்றும் கடற்படையினர் வசமுள்ள வீடுகள் விடுவிக்கப் பட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத் தனர்.

அடுத்து கல்வி தொடர்பாக ஆராய்ந்தபோது கலைப்பட்ட தாரிகள் தகுந்த பாடங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும். கணித, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும் என்றும்,

போக்குவரத்து விடயத்தில் குமுதினி படகுச்சேவை இல்லாத படியினால் தனியார் படகுச்சேவை தற்காலிகமாவது ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் வடதாரகையில் தற் போது பயணம் செய்யும் 100 பய ணிகள் எனும் கட்டுப்பாட்டை நீக்கி 150 பயணிகளாக அதிகரிக்க வேண்டும். அத்துடன் வடதார கைக்கு முறையான நேரசூசி வழங்க வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் குறித்து அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகா ரிகளுடன் விரிவாக ஆராய்ந்தார். அனைத்துப் பிரச்சினைகளையும் சாதகமான முறையில் அணுகி பொருத்தமான தீர்வு எட்டப்படும் என்று அமைச்சர் பொதுமக்களிடம் உறுதி வழங்கினார்.

# ஆபிரிக்க பிரதிநிதிகளும் அம்பாந்தோட்டைக்கு பச்சைக்கொடி

2018 ஆம் ஆண்டிற்கான பொதுநலவாய நாடுகளுக்கான விளை யாட்டு போட்டிகளை இலங்கையில் நடத்த வேண்டும் என, இலங்கை தமது விருப்பத்தை வெளியிட்டுள்ள நிலையில், ஆபிரிக்க பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

பாரியளவில் அபிவிருத்தியை கண்டு வரும் அம்பாந்தோட்டை நகரத்தில் இந்தப் பொதுநலவாய போட்டிகளை நடத்த இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது இலங்கை வந் துள்ள ஆபிரிக்க பொதுநலவாய பிரதிநிதிகள், இந்த விடையத்தில் இலங்கைக்கு தமது ஆதரவினை வழங்குவர் என எதிர்பார்க்கப்ப டுகிறது.

தற்போது இவர்கள் இரண்டாவது முறையாக இலங்கை வந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, கடந்த மாதம் கரேபியன் பொதுநலவாய விளையாட்டு பிரதிநிதிகள் இலங்கைக்கு வருஙகை தந்திருந்தனர்.

அவர்கள் இலங்கையின் தற்போதைய நிலமை குறித்து திருப்தி வெளியிட்டிருந்தனர். இந்த நிலையில், 80 வருட கால வரலாற்றை கொண்டுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு போட்டிக ளின் 10 ஆவது போட்டியே 2018 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு போட்டியாக, இந்த போட்டியை தமது நாட்டில் நடத்த வேண்டும் என அவுஸ்ரேலியாவும் முழு முயற்சியில் ஈடுப் பட்டு வருகின்மை குறிப்பிடத்தக்கது.

# வழமைக்குத் திரும்புகிறது மாந்தை கிழக்குப் பிரதேசம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாந்தை கிழக் குப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 500 வரையான குடும்பங்கள் இதுவரை மீளக்குடியேறியுள் ளதாகவும், இதனைத் தொடர்ந்து இப்பிரதேசம் வழமை நிலைக் குத் திரும்பிக் கொண்டிருப்பதா கத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள 15 கிராம சேவைகள் பிரிவுகளில் மேற்படி 2 ஆயிரத்து 500 குடும் பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் வரை மீள்குடியமர் ந்துள்ள தாகவும், இவர்களுக்கான வாழ் வாதார உதவிகள் உள்ளிட்ட ஏனைய உதவிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேபோல, மேற்படி 15 கிராம சேவையாளர் பிரிவுகளுக் கும் 10 கிராம சேவையாளர்களே சேவையாற்ற வேண்டிய நிலை யில், 5 கிராம சேவையாளர்க ளுக்கு வெற்றிடங்கள் இருப்பதா கவும் மாந்தை கிழக்குப்பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட் டுள்ளது. (110)

# பேருவளைக் கடலில் தொலைந்த படகு

(பேருவளை)


பேருவளை மீனவத்துறை முகத்திலிருந்து தொழிலுக்குச் சென்ற மீனவப் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக பாதிப்படைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

பியுமி துவ என்ற குறித்த படகு கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி கடலுக்குச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அந்தப் படகு மியன் மாரை அண்மித்த கடற்பிராந் தியத்தில் மிதந்த வண்ணம் இருப்பதாக அதில் பயணித்த மீனவர் தரைக்கு அறிவித்துள்ளனர். அந்தப் பட கில் 6 மீனவர்கள் இருந்ததாக அதன் உரிமையாளர் உப்புல் நிஸ்ஸங்க தெரிவித்தார்.

## செய்திப்பாணம்

**ஓர் கயிற்றின் இரு முனையில் ஒவ்வொருவ ராயிருவர்**
**நேர்நேர்ராய் தொங்கிய நேர்த்தியை - பார்த்தாலே**
**புரியாதா தற்கொலையல போட்டியிட்டு கட்டியதென்று**
**மரியாதை காதலுக்கு மட்டு!**



# மஞ்சள் காய்ச்சல் இலங்கைக்குள் ஊடுருவுவதைத் தடுக்க புதிய திட்டம்

(கொழும்பு)

மஞ்சள் காய்ச்சல் நோய் இலங்கைக்குள் தாக்கம் செலுத்துவதை கட்டுப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

உயிர்க்கொல்லி நோயான மஞ்சள் காய்ச்சல் தற்போது லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா வலய நாடுகளில் தாக்கம் செலுத்திவருகின்றது.

டெங்கு நுளம்பே குறித்த நோய்க் காரணியாக இனங் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்பாராத விதமாக இலங்கையினுள் மஞ்சள் காய்ச்சல் நோய்த் தொற்றுள்ள ஒருவர் இருப்பாராயின் அந்த நோய் தொற்றக்கூடிய அச்சுறுத்தல் இருப்பதாகவும், சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்குத் தீர்வாக லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து இலங்கை வருபவர்களை கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி தளத்தில் வைத்து தீவிர பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அவ்வாறு எவரேனும் சுற்றுலாப்பயணிக்கு நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டால் அவர் நாட்டினுள் சுற்றுலா செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையிலிருந்து குறித்த நாடுகளுக்கு செல் பவர்கள் மஞ்சள் காய்ச்சல் நோய்த் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு நோய்த் தடுப்பு ஊசி மருந் தூட்டலை பெற்றுக் கொள்ள வேண்டும் என பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

# யாழ்.நகரில் விபத்து இளைஞர் படுகாயம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதிப் பகுதியில் கயஸ் வானும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயத்திற்குள்ளாக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகர் டேவிட் வீதியைச் சேர்ந்த ஆர்.ராஜ்குமார் (வயது - 26, என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவத்தில் படுகாயமடைந்தவர் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார் எனவும், கடமையின் நிமிர்த்தம் சென்றபோது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# முதல் அரசியல் பயணம் செல்கிறார் ஆங் சான் சூகி

(பாகோ)



மியான்மர் எதிர்க்கட்சித் தலைவரான ஆங் சான் சூகி, நேற்று தனது முதல் அரசியல் பயணத்தை மேற்கொண்டிருந்தார். ஏழு ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஆங் சான் சூகி, நேற்று தனது ஆதரவாளர்களை சந்திக்க முதன் முறையாக சென்றுள்ளார். கடந்தமுறை தனது ஆதரவாளர்களை சந்திக்க கிராமப்புறங்களுக்கு சென்றபோது ஏற்பட்ட தாக்குதல் மற்றும் கலவரத்திற்கு பின் ஆங் சான் சூகி நீண்ட வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நேற்று ஒருநாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆங் சான் சூகி, மியான்மரின் வடக்கு பகுதி முக்கிய நகரமான யாங்கோன் பகுதிக்குச் சென்றிருந்தார். அங்கு தனது ஆதரவாளர்களுடனான பல சந்திப்புக்களில் பங்குகொணடார்.

# சமுர்த்தி நிவாரணம் தரமற்ற உணவு விநியோகம் தடுத்து நிறுத்துவது யார்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளினால் தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் சமுர்த்தி நிவாரணப் பொருட்கள் தரம் குறைந்தவையாகக் காணப்படுகின்றன என பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சமுர்த்தி நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசியே தரம் குறைந்ததாகக் காணப்படுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் முதல் ஆவணி மாதத்திற்கான சமுர்த்தி நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே இவ்வாறான தரம் குறைந்த உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (26)

# வென்றது அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ஹம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியை வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத்தாடியது.

களம் இறங்கிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் 208 ஓட்டங்களை பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 52 ஓட்டங்களையும் எஞ்சலோ மத்தியூஸ் 35 ஓட்டங்களையும் நுவன் குலசேகர 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

209 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி 38.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 212 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக பொன்டிங் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும் கிளார்க் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் பெற்று அவுஸ்திரேலிய அணியின் வெற்றியை உறுதிசெய்தனர்.

# கிழக்கில் தொடரும் பீதி: மட்டக்களப்பில் முக்கோண மகாநாடு

(மட்டக்களப்பு)



கிழக்கில் தொட ரும் மர்ம மனிதன் பீதியைக் கட்டுப் படுத்துவது தொடர் பாக மட்டக்களப்பில் விசேட முத்தரப்புப் பாதுகாப்பு மகாநாடு ஒன்று நேற்று இடம் பெற்றது.

இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளை தளபதி பொடிபஸ் பெரேரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் விஜே குணவர்த்தன, பிரிகேடியர் மஹிந்த முதலிகே, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமையநாயகம் உட்பட இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் பிரதேச செயலர்கள், சமய பிரமுகர்கள், பள்ளிவாசல்கள், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்களின் நிர்வாகிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தற்போது சர்ச்சையையும் பீதியையும் எற்படுத்தியுள்ள கிறீஸ் மனிதன் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதனையடுத்து, கிறீஸ் மனிதன் என்பது ஒரு பொய்யான விடயமாகும். இது தொடர்பில் கூடுதலாக வதந்திகளே பரவுகின்றது. இது ஒரு பொய்யான விடயம் என்பதை சிவில் சமூக அமைப்புகள் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து மக்களிடமுள்ள அச்சத்தை போக்க நடவடிக்கை எடுப்பதுடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாதுகாப்பு படை வீரர்களுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# எதிர்க்கட்சி என்பது நாட்டிற்கு எதிரான கட்சி அல்ல - ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)


எதிர்கட்சி என்பது நாட்டிற்கு எதிரான கட்சி அல்ல எனவும், இடம்பெறும் முறைகேடுகளை சுட்டிக்காட்டும் கட்சியாகவே செயற்பட வேண்டும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை நேற்று சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக எந்த தரப்பினரும் மேற்கொள்ளும் அழுத்தங்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் ஒரே பதிலையே வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்கட்சி நாட்டிற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாகன சாரதிகளுக்கு சீற் பெல்ட் கட்டாயம்



வாகனத்தை செலுத்தும்போது சீறபெல்ட் அணிவதனை ஒக்டோபர் முதலாம் திகதி முதல் கட்டாயப் படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டபூர்வ அனுமதி கிடைக்கப் பெற்றுவிட்டதாக போக்குவரத்து அமைச்சு செயலாளர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் ஆங்கில இலக்கத்துடனான வாகன பதிவு இலக்கம் கொண்ட அனைத்து வாகனங்களிலும் சாரதியும் சாரதிக்கு அருகாமையில் அமர்ந்திருப்பவரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் சீற்பெல்ட் அணிவது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தினை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓய்வு பெற்றவர்களுக்கும் இனி மருத்துவக் காப்புறுதி



ஓய்வு பெற்றவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி திட்டமொன்றை செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக ஓய்வூதிய ஆணையாளர் நாயகம் கே. ஏ.திலகரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த காப்புறுதி திட்டத்திற்காக ஓய்வு பெற்றோரிடமிருந்து சிறுதொகை கட்டணமே அறவிடப்படவுள்ளது. இந்த காப்புறுதி திட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் நோய் வாய்படும் சந்தர்ப்பங்களில் தேவையான நிதி உதவிகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஓய்வூதிய திணைக்களம் அறிவித்துள்ளது.

ஓய்வு பெற்றவர்களுக்கான மருத்துவ காப்புறறுதி திட்டத்தை செயற்படுத்துவற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.

# வலி. வடக்கில் விவசாயப் பதிவுகள்

வலி. வடக்கு விவசாய சம்மேளனத்தினால் ஜே/232, ஜே/223 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கான பதிவுகள் மேற் கொள்ளப்படவுள்ளது. இப்பதிவு நடவடிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை மேற்கொள்ளப்படவுள்ளதால் மீளக் குடிய மர்ந்துள்ள மக்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு சம்மேளன செயலாளர் நவரட்ணம் அறிவித்துள்ளார். (17)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் 'முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஓகஸ்ட் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.